
www.tamilarangam.net

# சுமைகள்



இருப்பிழந்த ஈடாடி புலம்பெயர்ந்து புகுந்த நாட்டில்
கறுப்பனென்று தரம்பிரித்த கொடுநெருப்புச் சிறையிலிட்டால்....?

சுமைகள் இதழ் - 3 ஆடி, ஆவணி 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழமைப் பக்கங்கள்

## பயணம்

வாடையடிக்குதடி
வாடகாத்து வீசுதடி
சென்னல் மணக்குதடி-நம்ம
சேந்து வந்த கப்பலிலே

வண்டி வருகுதடி
வடமதுரை டேசனிலே
தந்தி வந்து பேசுதடி-நம்ம
தரும தொரை வாசலிலே.




## கண்டிச் சீமை வந்த பின்

கண்டிக்கு வந்தமினு
கனத்த நகை போட்டமினு
மஞ்ச குளிச்சமினு
மனுச மக்க தெரியலியோ

பாதையிலே வீடிருக்க
பழனிச் சம்பா சோறிருக்க
எருமே தயிரிருக்க
ஏன்டி வந்தே கண்டிச்சீமை?

ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனே தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நாமறந்தேன்.



# நாஸிகளுக்கு எதிரான எழுச்சி

அகதி முகாமிற்கு வெடிகுண்டு வைத்துத் தகர்க்க முயற்சி, தேசிய பாதுகாப்புப் படை கட்ட முயற்சி, தேர்தலில் போட்டியிட்டு அதிகாரத்தை மாகாண, மாநகர ரீதியாகக் கைப்பற்றி, அகதிகளாக வருபவர்களையும் வெளிநாட்டவர்களையும் (ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கர்கள் மட்டும்) பொருளாதார உதவிகளைக் குறைப்பதன் மூலம் நாட்டைவிட்டு வெளியேற்றல், பரந்துபட்ட தாக்குதல்களை வெளிநாட்டவர்களுக்கு எதிராக நடத்துதல் இப்படியான பல செயற்பாடுகளைக் கொண்டு நிற, இனவெறியை வளர்ப்பதன் மூலம் வெளிநாட்டவரை நோர்வேயைவிட்டு வெளியேற வைப்பது என்ற ஒரே கொள்கையுடன் பல இனவாத நாஸி அமைப்புகள் நோர்வேயில் செயல்படுகின்றன.

இவ்வாறு செயல்படுபவற்றில் நோர்வே குடிவரவு எதிர்ப்பணியின் (NMI) தலைவர் ஆர்ண மீய்ர்டாலும் அவரது சகாக்களும் இன்று பிரபல்யமானவர்கள்.

இவர்கள் புறுமுண்டாலில் கூட்டம் கூட்டியபோது நிகழ்ந்தவை எல்லோருக்கும் நினைவிருக்கலாம். புறுமுண்டாலில் கடந்த வருடம் ஆர்ண மீய்ர்டாலும் குழுவினரும் கூட்டம் கூட்டுவதற்காக ஆயுத அணிப் பாதுகாப்புடன் சென்று கூட்டம் தொடங்கினர். அப்போது, அங்கு வருகை தந்திருந்த 'பிளிட்ஸ்' எனப்படும், இனவாதத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் ஒஸ்லோவைச் சேர்ந்த இளைஞர்கள் கூட்டத்தைக் கலைத்து ஆர்ண மீர்டாலின் இனவாத உரையை நிகழவிடாது தடுத்தனர். இதனால் இரு பகுதியினரிடையேயும் கைகலப்பு நிகழ்ந்து பலர் படுகாயமடைந்தனர். இந்நிகழ்ச்சியை புறுமுண்டால் மக்கள் கண்டும் காணாத மாதிரி இருந்தனர். இதனால், நோர்வே மக்களிடையே இனவாதம் தலைதூக்கிவிட்டதா எனப் பலர் கவலை கொண்டனர்.


ஆனால், இதற்கெல்லாம் மாறாக நோர்வே வரலாற்றில் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் மக்கள் ஒன்றுதிரண்டு நாஸி, இனவாத ஆர்ண மீர்டாலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நிகழ்ச்சி கடந்த யூன் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை ஸ்தவாங்கர் மாநகரில் நிகழ்ந்தது.

சம்பவ தினத்தன்று மாலை ஸ்தவாங்கர் நகர மையம் களைகட்டத் தொடங்கியது. ஆபிரிக்க உடையணிந்த நோர்வேஜியர்கள், ஆபிரிக்க முரசங்கள், பறைகள், ஊதுகுழல்கள், அழுகிய முட்டைகள், தக்காளிப் பழங்கள், இனவாதத்திற்கு எதிரான சுலோக அட்டைகள், மட்டைகளில் வெட்டப்பட்ட அவமதிப்புக் குறியீடுகள் சகிதம் குழுமத் தொடங்கினர். பொலிஸ், பாதுகாப்பு ஏற்பாடுகளை நகர் முழுவதும் கடுமையாக்கியிருந்தது.

பத்திரிகை நிருபர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் எங்கும் பரவலாகக் காணப்பட்டனர். திடீரென்று

www.tamilarangam.net






கூக்குரல்களும், பறையொலிகளும் ஓங்கி ஒலித்தன. ஆர்ண மீர்டாலும், அவரது குழுவினரும் மக்கள் கூட்டத்தை நோக்கி ஒலிபெருக்கி சகிதம் வந்தனர்.

முட்டைகள், தக்காளிப் பழங்கள், பியர்ப் போத்தல்கள் ஆகியன வானத்தில் பறக்கத் தொடங்கின. 'நாஸிப்பன்றி' என மக்கள் உரக்கக் கத்தினர். அதற்குப் பதிலளித்த மீய்ர்டால், "நீங்களே நாஸிகள். அப்படியிருக்க, நீங்களே கூட்டத்தைக் குழப்புவது சரியா?" என வினவினார்.

35 நிமிடங்களாக மீய்ர்டால் உரையாற்ற முயன்றார். முட்டை, தக்காளிப் பழத் தாக்குதல்களுக்கும், முரசங்களதும், மக்களதும் பலத்த ஒலிக்கும் மீய்ர்டாலினால் ஈடுகொடுக்க முடியவில்லை. சில வெளிநாட்டு இளைஞர்களும், நோர்வேஜியர்களும் ஆர்ண மீய்ர்டாலை நெருங்கினர். மீய்ர்டால் குழுவினரும் தயாராக இருந்தனர். ஆனால், அதற்கிடையில் பொலிஸ் ஆர்ண மீயர்டாலைப் பாதுகாப்பாக தமது வாகனத்திலேற்றி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றது. மீய்ர்டாலின் குழுவினரை இளைஞர் குழு ஒன்று விரட்டியபடி சென்றது. அவர்கள் புகையிரத நிலையத்தினுள் புகுந்து தஞ்சம் தேடினர்.

ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் நகர மையத்தில் மீய்ர்டாலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக் குழுமியிருந்தனர். ஆர்ண மீய்ர்டாலும் அவரது குழுவினரும் வெளியேற்றப் பட்டபின் அனைவரும் 'வெற்றி நமதே' என்ற பாடலைப் பாடத் தொடங்கினர். இதுபற்றி ஸ்தவங்கரின் பிரபல இனவாதத்திற்கு எதிராகச்




செயற்பட்டுவரும் மேற்றிராணியார் பியோர்ண் பூவ கருத்துத் தெரிவிக்கையில் "1945இல் நாஸிஸ்டுகளும், பாஸிஸ்டுகளும் ஐரோப்பாவில் ஒழிக்கப்பட்ட போது கிளர்ந்தெழுந்து ஆதரவளித்த மக்கள் இன்று திரும்பவும், இப்படியான சக்திகள் எமக்குத் தேவையில்லை என இந்த எதிர்ப்பின் மூலம் நிரூபித்துவிட்டனர்" என்றார்.

ஆர்ண மீய்ர்டாலை பத்திரிகை நிருபர்கள் பொலிஸ் நிலையத்தில் சந்தித்தபோது, "இன்று இவ்வளவு தொகையான ஆட்களை வேறு யாராலும் கூட்டமுடியாது, கவரமுடியாது. இன்று பொலிசார் தங்கள் வேலையை ஒழுங்காகப் பார்க்கவில்லை. இன்று எங்களுக்குத் தோல்வியில்லை, வெற்றி நமதே" என்றார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சிலர் கைது செய்யப்பட்டனர். வெளிநாட்டவர் ஒருவர் தனது குரலும், விரல் உயர்த்துவதும் மீய்ர்டாலுக்குத் தெரியவேண்டும் என்பதற்காக, எழுத்தாளர் அலெக்சாண்டர் சேலாண்டின் சிலையில் ஏறிப் பல தடவைகள் கையை உயர்த்திக் காட்டினார். பொலிசார் இவரை உடனே கைது செய்தனர். இப்படிக் கைதானவர்கள் சிலமணி நேரத்தின் பின் விடுதலை செய்யப் பட்டனர்.

ஆர்ண மீய்ர்டாலுக்கு எதிரான இந்த நிகழ்வை நோர்வேயின் திருச்சபை, ரூகலாண்ட் வெளிநாட்டவர் ஒன்றியம், நோர்வே கொமினிஸ்ட் கட்சி, மனித உரிமை அமைப்புகள், அரசியற் கட்சிகள் என்பன ஒழுங்கு செய்திருந்தன. இதில் கார்ல்.இ.ஹாகனின் முன்னேற்றக் கட்சியும் அடங்கும்.

இந்நிகழ்வை ஒழுங்கு செய்வதில் முன்னின்று உழைத்தவரும், ஆர்ண மீய்ர்டால் கூட்டத்தில் பேச ஆரம்பித்தபோது ஆபிரிக்க உடையணிந்து, 'சம்மா' மேளம் அடித்து, மீய்ர்டாலைப் பேசவிடாது தடுத்து, வெகு உற்சாகமாகக் காணப்பட்ட யோர்த்தன் நகர்ப்புற கலாசார அமைப்பாளர் சேதில் ஏகில் அவர்களைச் சந்தித்தபோது, "உண்மையிலேயே நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறோம். எமது உழைப்பின் பயன் எதிர்பார்க்காத அளவில் கிடைத்துவிட்டது. இப்படியான நாஸிகளுக்கும், இனவாதிகளுக்கும் எமது நாட்டில் இடமில்லை. இது மனிதர் வாழும் பூமி, மனிதாபிமானிகளின் தேசம். மீய்ர்டால் போன்ற சக்திகளுக்கு இங்கு


சேதில் ஏகில்

இடமில்லை. இந்த சக்திகள் விரட்டியடிக்கப்பட வேண்டும்" என்றார்.

இன்று நடந்த மீய்ர்டாலுக்கு எதிரான இந்த நடவடிக்கை, நோர்வேஜிய மக்கள் வழமையாக எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் இருந்து மாறுட்டுள்ளதை எம்மால் காணமுடிகிறது. குறிப்பாகச் சொல்லப் போனால், வழமையாக எதிர்ப்புத் தெரிவிப்பதானால் புறமுதுகு காட்டுவார்கள் அல்லது அமைதியான முறையில் ஊர்வலம் நடத்துவார்கள். இன்று ஸ்தவங்கரில் புதிய முறையில், தூஷணித்து, விரல் காண்பித்து, சம்மா பறைமுழுங்கி, முட்டை தக்காளிப் பழங்களை வீசியெறிந்து எதிர்ப்பைத் தெரிவித்தனர். "இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுமைகள் வினவியபோது "நீங்கள் கூறியதுபோல இன்று நடந்தது எமது வழமையான எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையல்ல. இதை உற்றுநோக்கிப் பார்த்தால், இன்று நடந்ததன் அடித்தளம், அதாவது இன்று எதிர்ப்புத் தெரிவித்த முறையின் பிறப்பிடம் மூன்றாம் உலக நாடுகள். நீங்களும் அனுபவப் பட்டிருப்பீர்கள். ஆசிய ஆபிரிக்க நாடுகளில் இப்படியான முறையில்த்தான் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். இப்போ நாமும் அம்முறையை இன்றிலிருந்து ஆரம்பிக்கிறோம். வேற்றுக் கலாச்சாரங்களில் இருந்து புதிய முறைகள் எமது கலாச்சாரத்தில் புகுவது நல்லதுதானே. நான் எனது என்று பிரிப்பவர் முன்னால், 'நாம் எமது எல்லோரதும்' என்ற முறையில் எதிர்ப்புத் தெரிவித்தோம்; வென்றுவிட்டோம்." என்றார் சேதில் ஏகில். எமது தேசத்தில்தான் இனவாதத்திற்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாதென்ற நிலையில் நாம் இங்காவது இன நிறவாதத்திற்கு எதிரான நிகழ்வில் கலந்துகொண்டேமே என்ற திருப்தியுடன் சேதில் ஏகில் அவர்களிடம் இருந்து விடைபெற்று வந்தோம்.

— உங்கள் நிருபர் —

## புகை! புகை!! புகை!!!

நோர்வேயில் குடிப்பழக்கம், போதை மருந்துபாவித்தல், கொலை, எயிட்ஸ் போன்ற காரணிகளால் மக்கள் மரணமடைவதை விட புகை பிடிப்பதனால் அதிகமானோர் மரணமடைகின்றனர்.

1988 கணக்கெடுப்பின்படி, 7500 நோர்வேஜியர்கள் புகை பிடித்ததினால் ஏற்பட்ட நோயினால் மரணமடைந்துள்ளனர். அதேவேளை, 2690 பேர் போதைவஸ்துப் பழக்கம், கொலை, தற்கொலை, எய்ட்ஸ், தீ விபத்து போன்றவற்றால்மரணமடைந்துள்ளனர்.

நோர்வேயின் அரசு குறைந்தது வருடமொன்றிற்கு போதைவஸ்து பாவனையைத் தடுக்க 171.2 மில்லியன்களையும், 3.8 மில்லியன்களை, புகைப்பிடித்தலைத் தடுப்பதற்காகவும் செலவிட்டு வருகிறது.

நோர்வேயில் ஆண்களை விட பெண்களே அதிகமாகப் புகை பிடிக்கின்றனர். இதனாலேயே குழந்தைகள் மன வளர்ச்சி குன்றியவர்களாகவும், அங்கவீனர்களாகவும் பிறக்கின்றனர். அத்துடன், (KRYBBEDØD) குழந்தைகள் எதுவித காரணங்களுமின்றி மருத்துவக் காரணங்களின்றி திடீர் மரணமடைவதும் இப்போது அதிகரித்து வருகிறது.



—சங்கரன்—



## உதிர்ந்தது உலகத் திரைவானின் பேரொளியொன்று



சத்யஜித் ரே மறைவு

உலகிலேயே அதிகூடுதலான திரைப்படங்களைத் தயாரிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. தரமான படங்களைத் தரக்கூடிய பல திறமையும், தகுதியும் நிறைந்தவர்கள் இந்தியாவில் இருந்தும்கூட வர்த்தக ரீதியான பாதிப்புகள் அவர்களைத் தலைநிமிர்த்த விடுவதில்லை.

பல திறமையுள்ள இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், தொழில்நுட்ப வியலாளர்கள் இன்றைய இந்தியத் திரையுலகின் வியாபாரக் குப்பைகளுக்குள் சிறைப்பட்டுத் திணறும் நிலையிலேயே உள்ளனர்.

வெறும் கனவுத் தொழிற்சாலைபோல், திரையரங்குகளில் மக்களை அடைத்து, அவர்களது சிந்தனைகளை வெறும் கற்பனைக் கிடங்கினுட் தள்ளி, இரண்டரைமணி நேரத்தின் பின் பட்டியிலிருந்து மந்தைகளைத் திறந்துவிடுவது போல் மூடித் திறக்கும் இந்தியத் திரையுலகில் இன்றும் ஒருசிலர் உன்னத கலையுணர்வோடு, மக்களின் சிந்தனைக்குரிய படைப்புகளை வழங்கிவருகின்றனர். இந்த வகையில் அகில உலகமுமே மெச்சும் வகையில் இந்தியச் சினிமாவை சர்வதேச அளவிலான ரசனைக்கும், பாராட்டிற்கும் உயர்த்தியவர் சத்யஜித் ரே என்றே கூறலாம்.

பதேர் பாஞ்சாலி என்ற படத்தின் மூலம் அறிமுகாகி அபராஜிதா, அபு சன்சார், ஆகன் டக், கேலி, நாயக், கரேபாய்ரே, கண சத்ரு, சத்கதி, மஹநகர், ஜீன்கன்யா போன்ற முப்பது படங்களை உருவாக்கினார்.

மக்களைச் சுடும் பிரச்சனைகளை மிகவும் எளிமையான முறையில், நுணுக்கமான பார்வையுடன் தனது ஒவ்வொரு பார்வையிலும் வெளிப்படுத்தியிருந்தார்.

அரசியல், மதம், தனிமை, மூட நம்பிக்கை போன்றவை சமூகத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைத் தனது படைப்புகளில் துல்லியமாகவும், அதேவேளை பிரச்சார வாடையற்று நாசுக்கான முறையிலும் தத்ருபமாக விளக்கியிருந்தார். சத்யஜித் ரேயின் திரையுலக வாழ்வு கிட்டத்தட்ட நாற்பத்தி மூன்று வருடங்கள். அவரது இந்த நாற்பத்தி மூன்று வருடத் திரையுலக வாழ்வில் முப்பது படங்களை மட்டுமே இயக்கியிருந்தார். தனது படைப்புகள் தரமுடையதாய் அமையவேண்டும் என்ற அக்கறையோடு, ஒவ்வொரு படத்தின் கதையையும், அவற்றின் தன்மைகளையும் வடிவங்களையும் தன்னுள் அசைபோடவும், திரும்பத் திரும்பத் தனது படைப்பின் கருத்துகளை மீளாய்வு செய்து செப்பனிடவும் நீண்ட காலங்களைச் செலவு செய்தார். தனது ஒவ்வொரு படத்திற்கும்

www.tamilarangam.net


இடையில் நீண்ட கால இடைவெளியை எடுத்துக் கொண்டார்.

இவர் இயக்கிய முப்பது படங்களில் 1961இல் வெளியான ஜீன்கன்யா, 1981இல் இயக்கிய சத்கதி ஆகிய இரண்டு படங்களுக்கும் தாகூரின் கதைகளைக் கருவாகக் கையாண்டார்.

ரேயின் முதலாவது படமான பதேர் பாஞ்சாலிக்கு மொத்தம் பதினொரு சர்வதேச விருதுகள் கிடைத்தன. பல நாடுகளின் பல்கலைக்கழகங்கள் இவருக்கு கலாநிதிப் பட்டங்களைக் கொடுத்துக் கௌரவித்தன.

பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்ம விபூஷன் ஆகிய பட்டங்களை இவருக்கு வழங்கியது இந்திய அரசு. இவருக்கு ஹொலிவூட் திரையுலகு மிகச் சிறந்த சாதனையாளருக்கான ஒஸ்கார் விருதை வழங்கியபின்பே இந்திய அரசு, இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருதை வழங்கியது.

இந்தியத் திரைப்பட உலகைச் சர்வதேச ரீதியில் இனங்காட்டி, வெளிநாட்டவர் மனங்களிலும் இடம்பிடித்துக் கொண்ட திரைமாமேதை சத்யஜித் ரே கடந்த சித்திரை மாதம் 23ஆம் திகதி கல்கத்தாவில் மரணமானார். இவர் மரணப் படுக்கையில இருந்தபோதுதான் ஒஸ்கார் விருதும் பாரத ரத்னா விருதும் கிடைத்தன. தனது படைப்புகளின் மூலம் சாகாவரம் பெற்று, தேச இன மொழி பேதமற்று அனைத்துலக மக்களின் மனங்களிலும் இடம் பிடித்துக் கொண்ட சத்யஜித் ரேக்கு இந்தியத் திரையுலகம் மிகவும் கடமைப் பட்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

**தமயந்தி**

## சுமைதாங்கிகள்

நீ சுமக்கும் சுமைகள்
முதுகில் புத்தங்கள்
மனதில் எத்தனை எத்தனை??
முகத்தில் தெரிகிறதே.

"மூத்தவள் வளர்ந்துவிட்டாள்
இளையவளும்தான்" -இது உன்
அம்மாவின் கடிதம்.

நீ தேய்ந்தே
உன் சுமைகள்தாங்கிவிடுவாய்
ஆனால்..
நாளை நான் நீயாக
மீண்டும் ஓர் அண்ணணன்.

இப்போதே புறப்படுவோம்
இதன் ஆணி வேரைத் தேடி
அழிப்பதற்குப் பாடுபடுவோம்
அதை வேரோடு தோண்டி.

அப்போது
சுமைதாங்கிகளுக்கே வேலை இருக்காது.

**பவானி.**

அன்புடன் வாசகர்களுக்கு!
சுமைகளைத் தொடர்ந்து பெற விரும்புவோர் வருட சந்தாவாக 200 குரோணர்களை சுமைகள் முகவரிக்கு தபாற்கட்டளை மூலம் செலுத்தி எமது முயற்சிக்கு உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.
நன்றி.
சுமைகள் வெளியீட்டுக்குழு

## கைகுலுக்கும் களங்கங்கள்



சோவியத் இறந்து விட்டது. அதன் சமாதியில் இன்று பல புதிய உறவுகள் உருவாக்கப்படுகின்றன.

தென் ஆபிரிக்காவின் பிரதமர் டீகளர்க் உருக்ஷ் சியாவிற்கு 1.6.92 இல் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

கொம்யூனிஸ் கட்சிகளின் ஸ்தாபகரும், உலகின் முதல்முதல் சமவுடமைத் தத்துவத்தை அடியாகக் கொண்ட இனமத பேதமற்ற அநுசை நிர்மாணித்த புரட்சி வீரர் லெனின் சமாதியான செஞ்சதுக்கத்தில் இனவெறி அரசின் பிரதமரும், கறுப்பின மக்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி நடத்தும் டீகிளார்க்கிற்கு ரஸ்சியாவின் தலைவர் யெல்ஸ்ரின் வரவேற்பு மரியாதை வழங்கினாள்.

அந்த வரவேற்பு வைபத்தில் கிளார்க்க பேசும் போது "கொம்யூனிசம் அழிந்து விட்டது, சோலியத் உடைந்துவிட்டது, அதேபோல் எமது நாட்டிலும் (Apartheid) இனவெறி ஒழிக்கப்பட்டுவிட்டது. மக்கள் சுதந்திரம் பெற்றுவிட்டனர் அதனாலேயே இன்று நான் எம் உறலை புதுப்பிக்க வந்தேன்" என்றார். இப்படியானதோர் உரையும் வரவேற்பும் சில வருடங்களுக்கு முன் (பெயரளவில் கொம்யூனிசம் இருந்த வேளை) டீ கிளார்க்கால் ஓர் இனவெறி அரசின் தலைவனால் அந்த செஞ்சதுக்கத்தில்

www.tamilarangam.net



நிகழ்த்தியிருக்க முடியுமா என்றால் நிச்சயம் இல்லை.

1948 இற்குப் பின் தென் ஆபிரிக்க அரசியலில் புகுத்தப்பட்டநிற, இன எதிர்ப்பு சட்டங்களினலா் அங்கு கறுப்பு இனத்தவர்களும், ஆசியக் குடியேற்களும் ஒடுக்கப்பட்டனர். சொந்த தேசத்திலேயே சிறுபான்மை வெள்ளையரால் பெரும்பான்மை ஆபிரிக்க மக்கள் அந்நியர்களாக உரிமை மறுக்கப்பட்டு அடிமைகளாக்கப் பட்டனர்.

இந்த நடவடிக்கைகளை அன்று மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் கண்டு கொள்ளவேயில்லை. ஏனெனில் மேற்கு ஐரோப்பியர்கள் காலனித்துவத்தை நீக்கிய பின் அங்கிருந்த மீதமான ஐரோப்பியர்களே அங்கு திரும்பவும் ஆபிரிக்க மக்களை ஒடுக்கும் ஆட்சியை செய்கின்றனர். இதேவேளை அன்றிருந்த சோவியத்யூனியனும், ஒருசில ஆசிய ஐரோப்பிய நாடுகளும் சேர்ந்தே உலக அரங்கில் கறுப்பின மக்களுக்காக குரல் கொடுத்தனர். அன்றிலிருந்து இறுதிகாலம் வரையில் பெயரளவில் சோவியத்தில் கொம்யூனிசம் பேசப்பட்ட போதிலும்கூட ஆபிரிக்க இன நிறவாதத்திற்கு எதிராக சோவியத் செயற்பட்டது. தமது விடுதலைக்காக போராடக் கிளர்ந்தெழுந்த சக்திகளுக்காக 34 வருட காலமாக அனைத்து உதவிகளையும் அங்கு செய்து வந்தது. கடந்த இரண்டு வருட காலங்களில் உலக அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. சோவியத் பிளவுபட்டது. தென் ஆபிரிக்க தேசிய விடுதலை இயக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார். தென் ஆபிரிக்க இனவெறி அரசு சட்டங்களைத் தளர்த்தி தென் ஆபிரிக்கர்களுக்கு சமஉரிமை வழங்குவதாக அறிவித்தது. ஆனாலும் மனித உரிமை மீறல்களுக்கு உரமிட்டு வரும் மேற்கத்தைய நாடுகளும் அமெரிக்காவும் உடனே தென் ஆபிரிக்காவுடனான உறவை வெளிப்படையாகப் பலப்படுத்த விரும்பவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை தென்னாபிரிக்காவுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதித்த போடு ஐ.நாவில் ஆங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்தும்

அதனை ஏற்றுக் கொண்டு சிறிது காலம் தொடர்பை துண்டித்துக் கொண்டன. ஆனால் மேற்கு ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் மறைமுகமாக பொருளாதாரத் தொடர்பை வைத்துக் கொண்டன. காரணம் தென்னாபிரிக்காவில் அணு ஆயுத உற்பத்திக்குத் தேவையான யூரேனியம்மற்றும் கைத்தொழிலுக்குத் தேவையான தாதுப்பொருட்கள் பெருமளவில் காண்படுவதே.

அன்றிருந்த சோவியத் யூனியனும் எந்தவித தொடர்பையும் தென்னாபிரிக்காவுடன் வைத்துக் கொள்ளவில்லை. இன்று அவசர அவசரமாக ஜெல்ஸ்ரின் தென்னாபிரிக்காவுதுன் உறவை வளர்த்துக்



கொள்வதற்கு மேற் கூறியவையே காரணங்களாகும்.

அரசியலில் நிரந்தர எதிரியுமில்லை, நிரந்தரப் பகையுமில்லை என்பதை திரும்பவும் வரலாற்றில் நிரூபித்துள்ளனர் ஜெல்ஸ்ரீனும் டீகிளார்க்கும்.

எது எப்படி நடப்பினும் ரக்ஷ்யா திரும்பவும் அணுவாயுத உற்பத்தியை பெருக்கி மீண்டும் ஓர் வல்லரசாக உருவாகி, உலகில் இமைதியைக் கலைக்காமலும் வார்த்தையளவில் தென்னாபிரிக்க மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளைநடைமுறைப் படுத்தாமல், இழுத்தடிக்காமல் இருந்தால் சரி.

ஆறுமுக ஆச்சாரியார்.

## இனி ஒருநாள் இங்கில்லை (1946)

இறைவா, இன்னமும் நீ பார்த்தால்,
இனி ஒருநாள் இங்கில்லை.

எஞ்சியிருப்பவை
ஊமைக் கூக்குரலும்,
செந்நிற மரங்களிற் தொங்கும்
கறுத்த உடல்களுமே.

கேள்! எங்கும் நிசப்தம்.

உறங்கு புலம்நோக்கி நடக்கிறோம்.
ஆனாலும்
எப்போதும் சந்திப்பவைகள் இவை.

ஒருநாள்.......
நாம் உணரப் போவதெல்லாம்
கொலை செய்யப்பட்டவர்களின் சுவாசம்.
நாம்
அசட்டையாக நடக்கும்போது
மிதிப்பதோ அவர்களின் சாம்பல்.
இறைவா,
இன்னும் நீ பார்த்தால்.....?
இனி ஒரு நாள் இங்கில்லை.

குன்வோர் ஹோவ்மோ (Gunvor Hovmo)
தமிழில்: அட்ஷயன்

*

www.tamilarangam.net



# மக்கள் மனங்களை ஈர்த்து நிரந்தர பக்தர்களாக்கிய வெண்கல நாதக்குரல்!



எம்.கே.தியாகராஜ பாகவதர்.

அப்படத்தில் 'பில்வமங்கிள்'' என்ற பாத்திரத்தில் பாகவதர் நடித்தார். அப்பாத்திரத்தின் பாட்டும் நடிப்பும் சிங்கள மக்களையும் மிகவும் கவர்ந்து விட்டதே காராணம். அஸ்வத்தம்மா என்ற பெயருடைய கன்னடப்பெண்மணியே 'சிந்தாமணி''யாக நடித்தார். அழகும் நல்ல சாரீரமும் சங்கீத ஞானமும் கொண்டவர் அஸ்வத்தம்மா. ஆகவே 'சிந்தாமணி'' இலங்கையில் ஒரு கலக்கு கலக்கிவிட்டதெனலாம்! 'எல்பின்ஸ்டன்'' படமாளிகையில் மாதக்கணக்காக ஓடியது அப்படம்! பாகவதரும் அஸ்வத்தம்மாவும் இணைந்து பாடிய பாடல்கள் இன்னும் நினைவில் நிறைந்து நிற்கின்றன. 'மாயப்பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை'', 'பஜனை செய்வோம் கண்ணன் நாமம்'', 'ஞானக்கண் ஒன்று இருந்திடும்போது'',''ராதே உனக்கு கோபம் ஆகாதடி'', 'திவ்வியதரிசனம் தரலாகாதா'', 'கிருஷ்ணா கிருஷ்ணா'' போன்றன. அடுத்து, 'அம்பிகாபதி'' வெற்றியீட்டியது.

திருநீலகண்டநாயனாரின் வாழ்க்கையினை படமாக்கி பக்திச் சிவநெறியினைப் பரப்பியது. 'திருநீலகண்டன்'' பாகவதரின் சொந்த தயாரிப்பான படம் நல்ல வரவேற்பினையும் பண வசூலையும் கொடுத்தது. பாபநாசம் சிவனின் அருள் ததும்பும் பாடல்களை உணர்ச்சியுடன் பாடிப் பக்திப்பரவசத்துடன்



தமிழ்த் திரையுலகில் கால் நூற்றாண்டு காலம் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவர் காலஞ் சென்ற இன்னிசை வேந்தர் எம்.கே.தியாகராஜ பாகவதர். நாடக மேடைகளில் கர்னாமிர்தமான பாடல்களைப் பாடி நடித்து பின் 'பவளக்கொடி'' என்ற திரைப்படம் மூலம் திரையுலகுள் பிரவேசித்த பாகவதர், தமது இனிய சாரீரத்தினால் பாமர மக்களின் இதயங்களில் இடம்பெற்றார். 'பாகவதர்'' என்ற சொல் கதாகாலட்சேபங்கள் நிகழ்த்துவோரையும், சங்கீத விற்பன்னர்களையும் குறித்த வந்துள்ளது. ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், எஸ்.வி.சுப்பையா பாகவதர், செம்பை வைத்தியநாத பாகவதர், ஹொன்னப்ப பாகவதர் போன்றோர் புகழுடன் வாழ்ந்தவர்கள். 'பாடகர்'' என்ற சொல் மருவி 'பாகவதர்'' ஆகியிருக்கலாம்! ஹொன்னப்ப பாகவதரும் திரையுலகில் சிறிது காலம் பிரகாசித்தவர். ஆனால் பிரவேசித்தது முதல் தனது வெண்கலநாதக் குரலில் கர்நாடக இசைப்பாணியில் அமைந்த பாடல்களைக் கம்பீரமான எடுப்பில் பாடி மக்களை பக்திப் பரவசப்படுத்தினார். தமிழ் சொற்களை சிதைக்காமலும் விழுங்காமலும் முழுப்பொலிவுடனும் உச்சரித்து (இப்போது நடப்பது வேறு விதம்!) உணர்ச்சியுடன் பாடிய பாடல்களை மக்கள் திரும்பத் திரும்பக் கேட்டும் தாமும் பாடியும் பாகவதர் பக்தர்களானார்கள். தமிழகத்திலும் கடல்கடந்து இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொறேசியஸ் போன்ற இடங்களிலும் பட்டிதொட்டிகளிலும் பாகவதர் பாடல்கள் ஒலித்தன. அதனால் பாகவதர் என்பது தியாகராஜபாகவதரைக் குறிக்கப் பாவிக்கப்பட்டது.

'சிந்தாமணி'' என்ற திரைப்படம் இலங்கை வந்த போது அதற்கு அமோக வரவேற்புக் கிடைத்தது.

நடிக்கப்பட்ட படம். 'திருநீலகண்டர்'' 'பவளமால் வரையில்'' என்ற திருவிசைப்பா பாகவதரின் வாயிலிருந்து வெளிவந்து பக்தர்களின் உள்ளங்களைத் தனல் மெழுகாக்கி விட்டது. 'சிதம்பரநாதா திருவருள் தாதா'' 'ஒருநாள் ஒருபொழுதாகிலும் சிவன் நாமம் உச்சரிக்க வேண்டும்'', 'தீனகருணாகரனே நடராஜா'' போன்ற பாடல்களை அக்காலச் சிறார்களும் பாடிக்களித்தனர். அக்காலகட்டத்தில் பாகவதர் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

'அசோக்குமார்'' என்ற பெயருடைய புத்தமதப் படம் இலங்கையில் நல்ல வரவேற்பினைப் பெற்றது. அசோகச்சக்கரவர்த்தியாக சித்தூர் வி.நாகையாவும் அவரின் மகன் குணாளனான பாகவதரும் நடித்தனர். சிற்றன்னையின் வஞ்சனையால் (பி.கண்ணம்பா) கண் பார்வையை இழந்த குணாளனுக்கு புத்தர் கருணையால் பார்வைகிடைக்கிறது. 'பூமியில் மானுடஜென்மம்'', 'சத்வ குணபோதன்'', 'தியானமே எனது'' போன்ற பாடல்களை கேட்டு தாமும் பாடினர் மக்கள்.

பொய்யாமொழிப் புலவரின் வாழ்க்கையில் ஒரு அம்சத்தினை 'சிவகவி''படம் வெளியிட்டது. வசனம், இளங்கோவன், பாடல்கள்; பாபநாசம்சிவன்என்ற விளம்பரத்தை கண்டதும் மக்கள் திரண்டு

படமாளிகைக்கு செல்வார்கள். அப்படியே 'சிவகவிக்கும்'', 'சொற்பன வாழ்வில் மகிழ்ந்து'', 'வள்ளலைப் பாடும் வாயால்'', 'வதனமே சந்த்ரவிம்பமோ'' போன்ற பாடல்களை ரசிகப் பெருமக்கள் ரசித்துத் தினமும் பாடினர்.

'கிருஷ்ணா முகுந்தா முராரே'', 'அன்னையும் தந்தையும் தானே'' போன்ற பாடல்கள் நினைவில்

www.tamilarangam.net



# கால் நூற்றாண்டுக் காலம் திரையுலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த எம். கே. ரி. பாகவதர்!

நிற்கின்றன. 'ஹரிதாஸ்'' வெற்றிவாகை சூடியதையடுத்து படத் தயாரிப்பாளர்கள் பாகவதரை வைத்து அனேக படங்கள் தயாரிக்க எண்ணினர். விளம்பரத்தில் வட்ட நிலாவின் நடுவே பாகவதர் வெள்ளைக் குதிரையில் பவனிவரும் காட்சியுடன் பன்னிரண்டு படங்களின் பேர் விளம்பரங்களும் இருந்தன. பாகவதரை வைத்து பன்னிரண்டு படங்களை தயாரிக்க எண்ணியது மக்களை வியப்பில் ஆழ்த்தியது. காரணம், தமிழ் நாட்டில் அக்காலத்தில் வருடத்திற்கு 12 படங்கள் தான் வெளிவந்தன! கண் திருஷ்டிபட்டால் போல் பாகவதரும் என்.எஸ்.கிருஷ்ணனும் அரசாங்க விருந்தினர்களானார்கள். 'இராஜயோகி'', 'நம்பியாண்டார்நம்பி'' போன்ற சில படங்களின் காட்சிகளும் எடுக்கப்பட்டன. அவ்வளவுதான்!

1944ஆம் ஆண்டு தீபாவளி வெளியீடாக 'ஹரிதாஸ்'' வெளிவந்தது. பிரபல பாடகி

சி.குமாரசாமி.

என்.சி.வசந்தகோகிலத்துடன் இணைந்து பாடியும் சிறந்த நடிகையான டி.ஆர்.இராஜகுமாரியுடன் சேர்ந்தும் நடித்தார் பாகவதர். கஷ்டமான 'சாருகேசி'' இராகத்தில் 'மன்மதலீலையை'' இசையமைப்பாளர் இராமநாதன் பாகவதரை பாடவைத்தது சங்கீத வித்துவான்களுக்கு வியப்பாக இருந்தது.

திருச்சிராப்பள்ளியில் விஸ்வகர்மா குலத்தில் 1910ஆம் ஆண்டு பங்குனி திங்கள் முதலாம் நாள் பிறந்தவர் தியாகராஜன். தந்தையார் கிருஷ்ணமூர்த்தி, சகோதரன் கோவிந்தராஜன். ஆரம்ப படிப்பின் பின்னர் நாடக மேடைகளில் பணத்[illegible] நடித்தார்கள். நாடக மேடைகளில் சொந்தக் குரலில் பாடி நடிப்பவருக்கே இடம் உண்டு.

ஒலிபெருக்கி கிடையாத காலம் அக காலம்! எஸ்.ஜி.கிட்டப்பா, கே.பி.சுந்தராம்பாள், பி.யூ.சின்னப்பா போன்றோர் நாடக நடிகர்களே!ஆயிரக்கணக்கான மக்கள் முன்னர் பாடி நடிக்க வேண்டும் என்றால் உரத்த குரலில் பாட வேண்டும். இப்படிப் பாடிப்பாடியே அவர்கள் குரல் பண்படுத்தப்பட்டது. வறுமையின் காரணமாய் தியாகராஜனும் - கோவிந்தராஜனும் நாடக கம்பனிகளில் தங்கியிருந்து, தயாரிப்பாளர்களின் ஆதரவில் உண்டும் உடுத்தும் வந்தனர். அப்போது கற்றறிந்தோரது சந்திப்பும் இவர்களுக்கு இடையிடையே கிடைத்தது. பம்மல் சம்பந்த முதலியார், கந்தசாமி முதலியார் (நடிகர் எம்.கே.ராதாவின் தந்தை) போன்றோர் நடிப்புக்கலை பற்றியும் இசைபாடும்

முறைபற்றியும் இலவசமாக கற்பித்தனர். ஆகவே, கலை ஆர்வத்தாலும் முன்னேற வேண்டுமென்ற தாகத்தாலும் நாடக மேடைகளில் இவர்கள் பெயர்பெற்றது வியப்பில்லை.

பாகவதர், ஆலத்தூர் சகோதரரிடம் சென்று முறையாக சங்கீதம் கற்று வந்தவர். பாபநாசம் சிவனின் பாடல்களையே அநேகமாக பாடிய பாகவதர், அவர் மேல் அளவுகடந்த குருபக்தி கொண்டிருந்தார். இதனை சிவன் வாயாலேயே கேட்போம், 'பாகவதர் குருபக்தி மிக்கவர். என் வீடு தேடி வந்து பாயில் உட்கார்ந்து மணிக்கணக்கில் பாடிக் காண்பிப்பார். 'மறைவாய்ப்பு தைத்த ஓடு'' என்ற தர்பார் இராகக்கீர்த்தனையை நான் பாடிக் காண்பிக்கும்போது ஒரு தவறு விட்டுவிட்டேன். பாகவதரும் அப்பிழையை அப்படியே ஒப்படைத்தார்.

பின்னர் நான் அதை திருத்தம் செய்து பாடினேன். அவர் பிடித்துக் கொண்டார். சொற்களை முழுப்பொலிவுடன் உச்சரித்து கம்பீரமாகப் பாடினார். மக்களும் கேட்டு பரவசமடைந்தனர்.''

பாகவதர் பற்றி எம்.ஜி.ஆர்.

'பொன்னொளி படைத்த பாகவதர்...! பொன் போன்றமேனி, தலையில் அலை அலையாக வாரிவிடப்பட்ட முடி கழுத்துவரை நீண்டிருந்தது. காதுகளிலும் கைவிரல்களிலும் மின்னும் வைரங்கள். பொன்னிறமான சட்டையின் மேல் சரிகைமட்டும் தெரியக்கூடியதாக மடிக்கப்பட்ட அங்கவஸ்திரம்...! இரசிகப் பெருமக்கள் பாகவதரை காணும் போதெல்லாம், கோயில் சூடம் காட்டப்படும் போது பக்தர்கள் ஆகா! என்று சொல்லிக் கன்னத்தில் போடுவது போன்ற ஒரு பிரமை... விஞ்ஞானம் ஒரு நன்மை செய்துள்ளது. 'நடிகன்குரல்'' முகப்பில் அச்சிட்டுள்ள பாகவதர் படத்தினை வீடு தோறும் வைத்து அஞ்சலி செய்வோம்''



-(நடிகன் குரல்)

சைவத்தமிழ் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், 'தியாகராஜ பாகவதர் பாடச்சென்ற இடம் எங்கும் மக்கள் அவரை, 'சிவபெருமான் கிருபை வேண்டும்'' பாடுங்கள் என்று கேட்டு பாடுவிப்பார்கள். அவர் குரலில் இனிமை மட்டுமல்ல பக்தியும் இருந்தது. அது அந்தக் காலம்!

பாடகர் டி.எம்.சௌந்தரராஜன், 'நாம் பாகவதர் வழியில் வந்தவர்கள். சிறுவனாக இருந்தபோதே அவரின் பாட்டுக்களில் மனதைப் பறிகொடுத்தவன். அவர் மாதிரிப் பாட வேண்டும் என்று இறைவனை வேண்டினேன். ஓரளவு வெற்றியும் கண்டேன்''.

திருமதி எம்.எல்.வசந்தகுமாரி முதன் முதலில் பின்னணி பாடியது பாகவதருடன் இணைந்து 'ராஜமுக்தி'' படத்தில் (வி.என்.ஜானகிக்காக) என்பது பலருக்குத் தெரியாதவிடயம். படங்களிலும், திருமணங்களிலும் பாடிவந்த பாகவதர் திருச்சி வானொலியிலும் சென்னை வானொலியிலும் பாடி வந்தார். தமிழ் இசைச்சங்கம், ராஜா அண்ணாமலை மன்றத்தில் பாகவதரின் கச்சேரியைத் தவறாது நடத்தி வந்தது.

இலங்கைக்கும் பல தடவைகள் கச்சேரி நடத்த வந்தார் பாகவதர். தமது ஐம்பதாவது வயதில் புகழுடம்பு எய்தினார்.

நன்றி-! வீரகேசரி

www.tamilarangam.net



# நாஸிகள் பற்றி சிறு குறிப்பு...

- தஜ -

ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பொருளாதார வீழ்ச்சியாலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களாலும் முன்புபோல் நாஸிசம் தலைதூக்கத் தொடங்கியுள்ளது. அன்று நாஸிசத்துக்குப் பலியானோர் யூத மக்களும், கொம்யூனிஸ்டுகளும் ஆவர். இன்று பல நூற்றுக்கணக்கான தேசிய இன மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.-

முதலாம் உலகயுத்தம் முடிந்தபின் ஜேர்மனி பொருளாதார வீழ்ச்சியினால் திண்டாடித் தவித்தது. முதலாம் உலக யுத்தத்திற்குக் காரணமாய் இருந்ததாலும் பொருளாதார விழ்ச்சியைச் சமாளிக்க முடியாமையினாலும் திண்டாடிய மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. அதன்பின் கொம்யூனிஸ்ட்டுக்களினால் சோவியத் யூனியனை அடிப்படையாகக் கொண்டு மக்களாட்சி உருவாக்கப்பட்டது. ஆனால் ஆட்சியிலிருந்த தலைமை காலப்போக்கில் சமவுடமைத் தத்துவத்திலிருந்து பாதைமாறியது. கொம்யூனிஸ்ட் புரட்சியை எற்படுத்த மறுத்தது. புரட்சியைத் தொடர விரும்பிய சக்திகளை வலதுசாரிகளுடன் இணைத்து அரசியலிருந்து ஒதுக்கியது.

முதலாம் உலக யுத்தத்தினால் ஏற்பட்ட கடன், நஷ்ட ஈடுகளைச் செலுத்துமாறு பிரான்சும் முதலாம் உலக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளும் ஜேர்மன் அரசை நெருக்கின.

அத்துடன் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதார நெருக்கடியும் ஜேர்மனிய அரசை இன்னும் ஈடாட வைத்தது.

இந்த சூழ்நிலையில் 1919ம் ஆண்டு தைமாதம் ஜேர்மன் தேசிய சோசலிஸ தொழிலாளர்கட்சி (NSDAP) நாட்டின் பொருளாதாரத்தைச் சீர் செய்யும் கொள்கைகளுடன்

* *அனைத்து மாநிலமும் ஒன்றிணைந்த ஜேர்மனி உருவாக வேண்டும்*

**ஜேர்மனிக்குள் வரும் ஜேர்மனியர் அல்லாதோரின் குடிவரவை தடுத்தல்; 1914 ஆவணி 2ற்குப் பின் ஜேர்மனிக்குள் குடியேறிய அந்நியர்களை வற்புறுத்தி வெளியேற்றுதல்.*

* *இந்நாட்டின் குடிமக்கள் யாரெனில் மதசார்பற்ற ரீதியாக ஜேர்மானிய இரத்தம் ஓடுகின்றவன் ஆதலால் எந்த யூதனும் ஜேர்மனியின் குடிமகன் ஆக முடியாது.*

* *ஜேர்மனிய மக்கள் வேற்று நாடுகளின் மக்களுக்கு இணையானவர்கள்*

போன்ற பதினாறு கொள்கைகளுடன் உருவாக்கப்பட்டது. 1921இல் முதலாம் உலக யுத்தத்தில் கோப்ரலாகப் பணியாற்றிய அடோல்ப் ஹிட்லர் N.S.DAPஇன் தலைவரானார். கட்சி இன்னும் உறுதியாக்கப் படவும், கட்சியின் கொள்கைகளுக்கு எதிரானவர்களைத் தண்டிப்பதற்காகவும் 'புயல்ப் படைப் பிரிவு' என்ற ராணுவப் பிரிவு உருவாக்கப்பட்டது.

1923இல் ஹிட்லர் தலைமையிலான முஞ்சன் (Munchen) ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி மேற்கொள்ளப் பட்டது. இதனால் ஹிட்லர் சிறையில் தள்ளப்பட்டார்.

சிறையில் இருந்த காலத்தில் 'நாஸிசம்' என்ற தத்துவத்தின் (?) வேதப் புத்தகமான Meinkampeயை எழுதி முடித்தார். அதில் 'ஆரியர்' எனப்படும் இனமே உயர்ந்த இனம்; அந்த ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்களே 'ஜேர்மானியர்கள்' எனப்படும் மக்களான வட ஐரோப்பியர்களாவர். அதற்கடுத்து கிழக்கு ஐரோப்பியர்களும், லத்தீன்மொழி பேசுபவர்களும், ஆரியரின் கீழ் சேவை புரிபவர்களாவர். ஆனால் கறுப்பர்களும், யூதர்களும், தோம்பர்களும் தீண்டத்தகாத கீழ் இன மக்களாவர். ஆகவே 'சுத்தமான' ரத்தமுடைய ஆரிய ஜேர்மனியர்களிடையே காணப்படும் தாழ்ந்த இனத்தவரான யூதர்களும், தோம்பர்களும், தன்னினச் சேர்க்கையில் ஈடுபடும் சுத்தமில்லாத ஆரியர்களும், பொருளாதார வீழ்ச்சிக்கும் முதலாம் உலக யுத்தத்திற்கும் காரணமான மக்கள் எதிரிகளான கொம்யூனிஸ்ட்டுகளும் முதலில் ஒழிக்கப்பட வேண்டும்.

இந்த ஜேர்மனியை ஜனநாயக ஆட்சிமுறையில் ஆட்சி செய்ய முடியாது. ஜேர்மன் பலம்படைத்த ஒருவனால் ஆட்சி செய்யப்படல் வேண்டும். ஜேர்மனியை விரிவுபடுத்துதல் கிழக்கைத் தேடி அமையவேண்டும் என்று ஹிட்லர் தனது நாஸிச தத்துவத்தின் அடிப்படைக் கருத்தை விபரிக்கின்றார்.

1924இல் சிறையில் இருந்து திரும்பி, ஹிட்லர் Mainkampeஇல் குறிப்பிட்டது போல் செயற்பாட்டில் இறங்கினார்.

வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கும், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும், முதலாம் உலக யுத்தத்தின் தோல்விக்கும் காரணம் கொம்யூனிஸ்டுகளும் யூதர்களும் என ஹிட்லரின் கட்சியினரால் பரப்பப்பட்டது. ஹிட்லரின் திருத்தியமைக்கப்பட்டு 'களை எடுக்கப்பட்ட' புயல் படைப் பிரிவு, புதிய பெயரான எஸ்எஸ் என்ற பெயர் பெற்று, ராணுவ ரீதியான தாக்குதல்களை யூத மக்கள்மீதும் கொம்யூனிஸ்டுகள் மீதும் தொடுத்தது. இதன் விளைவாக யூத, கொம்யூனிஸ்ட் தத்துவ எதிர்ப்பு ஜேர்மன் மக்களிடையே உருவானது.

நாட்டின் அனைத்துக் குறைபாடுகளுக்கும் காரணம் யூதர்களும், கொம்யூனிஸ்டுகளும் தான் என ஜேர்மன் மக்கள் நம்பினர்.

1929இல் ஏற்பட்ட பாரதுாரமான பொருளாதாரச் சரிவினால் ஏற்பட்ட குழப்பத்தில் அடோல்ப் ஹிட்லரின் நாஸிக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

இதன்பின் இன்னும் உக்கிரமாக யூதர்கள் ஒடுக்கப் பட்டனர். யூதக் குடியிருப்புகளில்

புகுந்து, நாஸிகள் யூத மக்களைச் சுட்டுக் கொன்றனர். தங்கள் புதைகுழிகளைத் தாங்களே வெட்டவைத்து, குழந்தைகளையும் பெண்களையும் கொலை செய்து புதைத்தனர்.

விஷவாயு அறைகளிலும் சித்திரவதை முகாம்களிலும் அடைத்து வைத்தனர்.

ஜேர்மனியில் கொம்யூனிஸ்டுகளை அழித்துவிட்டு இரண்டாம் உலக யுத்தத்தை தொடங்கி, கொம்யூனிஸ்டுகளை உலகிலிருந்தே விரட்டுவதாக கங்கணம் கட்டிக்கொண்டு கிழக்கு ஐரோப்பாவையும் மற்றும் தனது எல்லை நாடுகளையும் தேடிப் படையெடுத்தார் ஹிட்லர்..

இதன் விளைவாக, ஒன்றிணைந்த நாடுகளின் கூட்டுத் தாக்குதல்களால் ஜேர்மன் நாஸிப் படைகள் தோற்கடிக்கப் பட்டன. இத்தோல்விக்கு வழிவகுத்தது சோவியத் யூனியனின் செம்படையாகும்.

செம்படை பேர்லினில் தனது செங்கொடியை ஏற்றியதையடுத்து போரின் இறுதியில் ஹிட்லர் தற்கொலை (?) செய்துகொண்டார். ஜேர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டது. யுத்தத்திற்குக் காரணமான நாஸிகள் சர்வதேச நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டனர். நாஸிசமும் ஒடுக்கப் பட்டது.

ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பொருளாதார வீழ்ச்சியாலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களாலும் முன்புபோல் நாஸிசம் தலைதூக்கத் தொடங்கியுள்ளது. அன்று நாஸிசத்துக்குப் பலியானோர் யூத மக்களும், கொம்யூனிஸ்டுகளும் ஆவர். இன்று பல நூற்றுக்கணக்கான தேசிய இன மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.-


ISSN 0847-3749
தாயகம்
Recycle This Newspaper
"உண்மையைத் தேடி"
Georgicka Communications,
P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.
Tel: (416) 920 9081 Fax: 963 5738
சந்தா விபரம்:
கனடா ஆறுமாதம் $25
வெளிநாடுகள் ஆறு மாதம் $50.



# எதிரொலி எதிரொலி எதிரொலி
## எதிரொலி எதிரொலி எதிரொலி
### எதிரொலி எதிரொலி எதிரொலி

சுமைகள்: உங்களது பதவி, கடமை என்னவென்று கூறமுடியுமா?

யோவா: இங்கு வாழும் வெளிநாட்டவர்களின், குடியேறியவர்களின் வதிவிட, உத்தியோக அனுமதி, பிரஜாவுரிமை பெறுவதற்கான விண்ணப்பம் போன்றவற்றிற்கான விண்ணப்பங்களை ஆராய்ந்து முடிவெடுத்தல், 80களின் பின்னர் கூடுதலாக வரும் அகதிகளின் விண்ணப்பங்களை விசாரணை நடத்துதல், அவற்றை ஆராய்தல் போன்றவை எனது பணியாக உள்ளன.



ஹரால்ட் யோவா
பொலிஸ் அதிகாரி
(வெளிநாட்டவர் திணைக்களம்)

சுமைகள்: ஒரு அகதித் தஞ்சம் கோரும் விண்ணப்பதாரியை எப்படி விசாரணை நடத்துகிறீர்கள்? எந்த வகையான கேள்விகளை விசாரணையின்போது வினவுகிறீர்கள்?

யோவா: எந்த வகையான கேள்விகளைக் கேட்கிறோம் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது, சொல்ல விரும்பவுமில்லை. ஆனால் விசாரணை பண்ணும்போது அந்த நபருக்கு உண்மையிலேயே தஞ்சம் கோரத் தகுதி உள்ளதா, அவர் சொல்லும் வரலாறு அல்லது தகவல்கள் உண்மையானதா என முடிவுக்கு வருவதற்குக் கூடியளவு (வினவும் வினாக்கள் மூலம்) முயற்சி செய்வோம்.

சுமைகள்: தற்போது ஒரு தஞ்சம் கோரும் விண்ணப்பத்தை எவ்வளவு விரைவில் ஆராய்ந்து முடிவுக்கு வருகிறீர்கள்? விண்ணப்பம் ஆராயப்படும் படிமுறைகள் என்ன?

யோவா: முதலில் ஒருவர் தஞ்சம்கோரி விண்ணப்பித்த பின்னர் 14 நாட்களுக்கிடையில் விசாரணை நடத்துகிறோம். அதன் பின்னர் விசாரணை விபரங்கள் வெளிநாட்டவர் திணைக்களத்துக்கு (UDI) அனுப்பப்பட்டு, எங்கள் உதவியுடன் ஆராயப்படும். அத்துடன் சம்பந்தப்பட்ட நபரின் தாய்நாட்டிலுள்ள எமது முகவர்கள், உதாரணமாக, இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பதாரியின் தகவல்கள் உண்மையானதா எனப் பரிசீலிப்போம். அதன் பின் ஒரு முடிவுக்கு வருவோம்.

சுமைகள்: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பிரஜையின் தகவல்களை உங்களின் தூதரகத்தால் எப்படித் திரட்டமுடியும்?

www.tamilarangam.net



யோவா: இன்று இருக்கும் சூழலில், எமது வசதிகளின்படி யாழ்ப்பாணத்தில் ஒரு சிறு கிராமத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் பற்றி ஓரளவுக்கு உண்மையான தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளது. ஆனால் எப்படி எவர் தருகின்றனர் என்று குறிப்பிட்டு இங்கே கூறமுடியாது.

சுமைகள்: தஞ்சம் கோரும் விண்ணப்பதாரிக்கு பாதகமான முடிவு அவர் விண்ணப்பத்திற்கு உங்களால் எடுக்கப்பட்டால், அதன் விளைவு என்ன?

யோவா: அப்படியான சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரிக்கு எதிர்மனுச் செய்யும் உரிமை உண்டு. முதல் எதிர்மனுவை வெளிநாட்டவர் திணைக்களத்திற்கு விண்ணப்பதாரரின் சட்டத்தரணி மூலம் அனுப்பவேண்டும். வெளிநாட்டவர் திணைக்களம் தனது முடிவில் மாற்றமில்லை என அறிவிக்கும் பட்சத்தில் நீதி அமைச்சுக்கு அம்மனு அனுப்பப்பட்டு, அங்கேயும் பாதகமான முடிவு கிடைக்குமானால், சிலவேளை மந்திரிசபைக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அரிது. எல்லாவிடத்திலும் பாதகமான முடிவு எடுக்கப்படுமிடத்து, நாட்டைவிட்டு வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்படும். அல்லது, எமக்குக் குறிப்பிட்ட நபரை நாடுகடத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நாடு கடத்தப் படுவார்.

சுமைகள்: இந்த வருடத்தில் வெளிநாட்டவருக்கான சட்டங்களில் பல மாற்றங்கள் கொண்டுவரப் பட்டுள்ளதாக அறிகிறோம். அதுபற்றிக் கூறமுடியுமா?

யோவா: மாற்றங்கள் ஏதும் பெரிதாக ஏற்படுத்தப் படவில்லை. ஆனால், சட்டத்தின் இணைவிதிகள் புதிதாக உருவாக்கப்பட்டு, சட்டம் முன்பைவிட இறுக்கமாக்கப் பட்டுள்ளது. இங்கே எல்லாவற்றையும் விபரிக்க முடியாது. உதாரணமாக முன்பெல்லாம் அகதியாக விண்ணப்பிப்பவரைக் கையடையாளம் எடுப்பதில்லை. அதுபற்றிச் சட்டத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடப் படவில்லை. ஆனால், இப்போதுள்ள உபவிதிகளின்படி கட்டாயமாக கையடையாளம் எடுக்கப்பட வேண்டும். இந்த விதி புகுத்தப் பட்டதற்குக் காரணம், நோர்வேக்கு வரும் பெரும்பாலான அகதிகள் வேற்று ஐரோப்பிய நாடுகளில் வசித்தவர்களாக இருக்கின்றனர் அல்லது முன்பே அகதிகளாக அங்கீகரிக்கப் பட்டவர்களாக இருக்கின்றனர். இதுபற்றி நீங்களும் அறிந்திருக்கக் கூடும்.

சுமைகள்: மனிதாபிமான அடிப்படையில் வதிவிட அனுமதி பெற்ற ஒருவர், தனது குடும்பத்தினரை இங்கு அழைக்க வேண்டுமென்றால் எந்தவிதமான நிபந்தனைகளை விதிக்கிறீர்கள்?

யோவா: முதலில் அவரது குடும்பத்தினர் தமது தாய்நாட்டில் உள்ள எமது தூதரகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பம் எமக்கு இங்கு அனுப்பப்பட்டு எங்களால் ஆராயப்படும். இங்கு வதிவிட அனுமதி பெற்று வாழ்பவருக்கு, தமது குடும்பத்தினரை இங்கு வைத்துப் பராமரிக்கத் தகுதியுடையவரென்று கண்டால் அவரது குடும்பத்தினருக்குப் பயண அனுமதி வழங்குவோம். அதாவது, இங்கு வாழ்பவருக்கு முழுநேர வேலையும் வதிவிட வசதியும் இருக்குமானால் அவரது குடும்பத்தினர் இங்கு வரலாம்.

சுமைகள்: யார் யார் 'குடும்பம்' என்ற தகுதியில் இங்கு வரத் தகுதியானவர்கள்?

யோவா: இங்கு வாழ்பவருடன் சட்டரீதியாக திருமணமோ அல்லது



பதிவோ செய்துகொண்டவர்கள் அல்லது மூன்று வருடகாலம் இணைந்து வாழ்ந்தவர்கள், 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், விதவைத் தாய் அல்லது தந்தை என அந்நியச் சட்டத்தின் உபவிதி 22 கூறுகிறது. குடும்பத்தினரை இங்கு அழைப்பதென்பது கஷ்டமானதோர் விடயமாக உள்ளது. நோர்வேயில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. அத்துடன் இப்போது நடைமுறையில் உள்ள அந்நியச் சட்ட உபவிதிகளின்படி ஒருவர் மூன்று வருடங்கள் தொடர்ந்து வசித்திருக்க வேண்டும். குற்றமேதும் செய்திருக்கக் கூடாது. அத்துடன் நிரந்தர வதிவிட அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

சுமைகள்: நிரந்தர வதிவிட அனுமதி என்றால் என்ன?

யோவா: மனிதாபிமான அடிப்படையில் வதிவிட அனுமதி பெற்ற ஒருவரை முற்றுமுழுதான 'அகதி'யாக சட்டம் ஏற்றுக் கொள்வதில்லை. அந்த நபரை எந்த நேரத்திலும் அவரது நாட்டில் மாற்றம் ஏற்பட்டால் (அதாவது அரசியல் மாற்றம் ஏற்பட்டு சுமுகமான சூழ்நிலை எனக் கருதும் வகையில்) அல்லது அவர் விசாரணையில் கூறிய விபரங்களுக்கு மாறான நிலை அவரது நாட்டில் காணப்படுமிடத்து, அவரை நாடுகடத்தவோ, வெளியேற்ற உத்தரவிடவோ எமக்கு அதிகாரமிருக்கிறது. ஆனால் அந்நபர் தொடர்ச்சியாக 3 வருடங்கள் இந்நாட்டில் வசித்தாரானால் நிரந்தர வதிவிட அனுமதி வழங்கப்படுகிறது. நிரந்தர வதிவிட அனுமதி இருந்தால் அவரை எவருமே வெளியேற்ற முடியாது. ஆனால் அவர் நோர்வேஜியப் பிரஜையாக முடியாது. இது, அந்நியச் சட்டம் 12இன் உபவிதி 43இல் விபரமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. பிரஜாவுரிமைச் சட்டம் 6இற்கிணங்க ஒருவர் இங்கு தொடர்ச்சியாக 7வருடங்கள் வசித்தால் பிரஜாவுரிமை பெறலாம். அகதிகளைப் பொறுத்தவரை நிரந்தர வதிவிட அனுமதி பெற்றபின் 4 வருடங்களில் பிரஜாவுரிமை பெற விண்ணப்பிக்கலாம். தகுதியுடையவர் என்று காணும் பட்சத்தில் அவருக்குப் பிரஜாவுரிமை வழங்கப்படும்.

சுமைகள்: இலங்கைத் தமிழர் பலர் மாணவர்கள் என இங்கு வந்தவர்கள். அவர்களின் நிலை என்ன? அவர்கள் நீங்கள் கூறிய சட்ட விதிகளுக்கிணங்க இங்கு வசிக்க முடியாதா?

யோவா: நல்ல கேள்வி. இங்கு பல தமிழர்கள் மாணவர்களாகத் தான் வந்தனர். பெரும்பாலானவர்கள் அந்த நிலையில் இருந்து மாறிவிட்டனர். தற்போது, பெரும்பான்மையான மாணவர்கள் மனிதாபிமான அடிப்படையில் வதிவித அனுமதி பெற்றுள்ளனர். உண்மையிலேயே படிப்பதற்காக இங்கு வந்தவர்களே இன்றும் மாணவர்களுக்கான அனுமதியுடன் வசிக்கின்றனர். ஆனால் மாணவர்களாக வருபவர்கள் எல்லோரும் திரும்பிச் செல்கிறார்கள் என்று அர்த்தமல்ல. மூன்றாம் உலக நாட்டு மாணவர்களில் 2 வீதமானோர் திரும்பிச் செல்கின்றனர். இந்தக் காரணங்களாலேயே மூன்றாம் உலக நாட்டு மாணவர்களை இங்கு கல்விகற்க நாம் அனுமதிப்பதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புகலிடப் பெண்ணிலை வாதமும் அம்மி, ஆட்டுக்கல், உரல், உலக்கை இறக்குமதியும்

**ஜெயந்தீஸன்**

புகலிடத்தில் வளரத் துடிக்கும் பெண்ணிலை வாதம் ஒரு மிகப் பெரும் அபாயத்திற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அம்மி, உரல், உலக்கை, ஆட்டுக்கல் வடிவங்களில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுதான் இந்த அபாயம். ஆனால் இன்று வரை எந்தப் பெண்ணிலை வாத அமைப்புகளோ அல்லது வெளியீடுகளோ இது விடயத்தில் விசனம் காட்டாமல் இருப்பது வேதனைக்குரியது. புகலிடம் தரும் நாடுகளின் சாப்பாட்டு வகைகள் நாவுக்கு ருசியாக இல்லை என்று உணவுப் பொருட்களை தாயகத்தில் இருந்து இறக்குமதி செய்யும் போக்கை விமர்சித்தல் நாகரிகமானதல்ல. ஆனால், சில இறக்குமதிகள் பற்றி நாம் கட்டாயம் கவனத்திற்கு எடுக்க வேண்டும். ஏனெனில் இது குறிப்பாக பெண்ணிலைவாதத்துடனும் பொதுவாக மனிதம் பற்றிய 'எம்மவர்'களின் மதிப்பீடுகளுடனும் சம்பந்தப் பட்டதாகும்.

தாயகத்திற்கும் புகலிடத்திற்கும் இடையே அடிப்படையான வித்தியாசம் ஒன்று உண்டு. அங்கு இன்னமும் கணனிக் கலாசாரம் தொடப்படவில்லை. அது இன்னமும் 'கண்ணிவெடி' 'ஏ.கே 47' கலாசாரத்துக்குள் தான் உள்ளது.

ஆனால் கணனிக் கலாசாரத்துக்குள் நுழைந்து கொண்டுள்ள மேற்கு நாடுகளில், பெண்களின் உரிமைகள் ஆண்களின் உரிமைகளுக்கு சமானமாக நூறு வீதம் வந்துவிட்டது என்று சொல்ல முடியாது விட்டாலும், தொழில் நுட்ப முன்னேற்றம் பெண்கள் மீது சுமத்தப்பட்டு இருந்த பழுவை கணிசமான அளவுக்கு குறைத்துள்ளது என்பது மட்டும் மெய். இதே வேளையில் பெண்களாகட்டும், ஆண்களாகட்டும்,

தமது இருத்தலிற்காக உடலை வருத்தி உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில். இங்கே, பெண்களின் சமையலறைச் சுமையைக் குறைக்குமளவிற்கு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சமையலறையில் மீதம் பிடிக்கப்படுகின்ற சுமை, தொழிலகங்களில் தோளில் ஏறிக் கொள்கின்றது என்பது வேறு விடயம். கணனிக் கலாசாரத்தை வாழும் நாடுகளை நோக்கியே, அம்மிக் கலாசாரத்தை வாழ்ந்த நாம் அகதிப் பட்டம் கோரியும் தேடியும் வந்தோம். ஆனால் நாம் எம்மைப் பீடித்திருக்கும் 'அசுத்த ஆவிகளையும்' இங்கே கூட்டிக் கொண்டு வரத் தவறவில்லை.

பெண்கள் அங்கிருந்து பண்டங்களாக இங்கே இறக்குமதி செய்யப்பட்டும் உள்ளனர். இவர்களில் பலர் இங்கேயுள்ள பொருளாதாரக் கட்டுமானங்களிற்கு ஏற்ப உழைக்கத் தொடங்கியுள்ளனர். இது தமிழ் பெண்களை ஓரளவிற்காவது



'ஆண்களுக்கு சமானமாக' ஆக்கியுள்ளததா என்றால் இல்லை என்பதே விடையாகின்றது. உழைக்கவும் வேண்டும், சமைக்கவும் வேண்டும் என்ற விதிகளை சுமந்தபடியே எமது தமிழ் பெண்களில் பலர் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இது மிகவும் வேதனைக்குரிய ஒரு யதார்த்தம்.

ஐரோப்பிய வெளியீடுகள் பலவற்றில் இன்று 'ஒழுக்கவாதத்தை' புதுமையானதும், புரட்சியானதுமான மொழிகளிற்கூடாக புனருத்தாரணம் செய்து கொண்டிருப்போர், இந்தப் பெண்களின் மனக் குமுறல்கள் மீது நெஞ்சை நிமிர்த்தி நடப்பவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் இந்தப் பெண்களுக்கு B.C (Bachelor of Cooking), M.C (Master of Cooking) பட்டங்களையே வழங்கிக் கொண்டுள்ளனர்.

மேற்கு நாடுகளில் வாழும் தமிழ் பெண்களில் பலரை, அவர்களது வீடுகளில் நான் கத்தியோடும் கோப்பையோடும் தான் கண்டுள்ளேன்.

எம்மவர் தமது பாசையில் சொல்வது போல் இவர்கள் 'வாழ்க்கைத் துணைவிகள்' கூட அல்லர். 'வேலைக்காரிகள்' 'சமையல்காரிகள்' ஆக இறக்குமதி செய்யப்பட்டோர். இங்கு சமையல் என வரும் போது ஆண்களின் பங்களிப்பு மிக மிகக் குறைவு தான். (சமையல் வேலையில் பெண்களுடன் இணைந்து கொள்ளும் ஆண்கள் மிகச் சிறுபான்மையினரே. இவர்கள் மீது இந்த விமர்சனம் வைக்கப்படவில்லை) இதற்கு கூட எம் ஆண்கள் இப்படியொரு காரணத்தைச் சொல்கின்றனர். 'நாங்கள் உழைச்சிட்டு வாறம். அதுகள் சமைச்சுப் போட்டா ஏதும் குறைஞ்சிடுமே'. இது போலிக் காரணம். சில வீடுகளில் பெண்கள் மட்டுமே உழைக்கின்றனர். இவர்களுக்கு அங்கேயுள்ள ஆண்கள் சமைத்து வைப்பதில்லை என சில பெண்கள் 'அவரிட்டை சொல்லிப் போடாதையுங்கோ' என்ற சத்தியத்தைப் பெற்றுக் கொண்ட பின் சொல்லியுள்ளனர்.

27 வயதுள்ள ஒரு பெண், அதாவது உழைப்பவர், என்னிடம் சொன்ன தகவல் இது. 'எனக்கு காலை ஏழு மணிக்கு வேலை. அவருக்கு வேலை பத்து மணிக்கு. நான் காலை நாலு மணிக்கு எழுந்து வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் (ஆறு ஆண்கள்) சமைத்து வைத்து விட்டுத் தான் வேலைக்குப் போவேன். இல்லாது விடில் அன்றைக்குப் பிரச்சனை தான்'

இந்தப் பரிதாபகரமான நிலைக்கு அழிவு ஏற்படாத இந்தக் கால கட்டத்தில் தான் உணவுப் பொருள்கள் இறக்குமதியோடு, தற்போது ஆட்டுக்கல், அம்மி, உரல், உலக்கை என்பனவும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது உளவியல் ஆய்வுக்கு எடுக்கப்பட வேண்டிய ஒரு சமாச்சாரம்.

அம்மி, ஆட்டுக்கல், உரல், உலக்கை இவைகளைக் கொண்டு ஐந்து மணித்தியாலங்களில் செய்யும் வேலையை அரை மணித்தியாலத்தில் செய்யும் அப்பனை உபகரணங்கள் எல்லாம் இங்கு உள்ளன. இவைகள் பெண்களுக்கு உரிமைகளைக் கொடுக்காது விட்டாலும் உடல் நோய்களையாவது கொடுக்காதிருக்கும். நிறைக்கனதியையும், நேரமினக் கேட்டையும் கொடுக்கும் இவை ஏன் இறக்குமதி செய்யப்பட வேண்டும்? "ஏனா? பெண்களை 24 மணி நேரமும் குசினிக்குள் பூட்டி வைத்திருக்கத் தான்" எனப் பதிலளித்தார் பெண்ணிலை வாதக் கட்டுரைகளை எழுதும் எனது நண்பர் ஒருவர். இவரது கூற்று உண்மை என்பதை எனக்கேற்பட்ட இன்னொரு அனுபவத்திலிருந்து கண்டு

www.tamilarangam.net



கொண்டேன்.
35 வயது நிரம்பிய ஒரு பெண், கடுமையான உழைப்பாளி. வந்த நாளிலிருந்து வாரத்திற்கு ஆறு தினங்கள் என வேலை செய்து வருபவர். இவரது கணவரோ நான்கு தினங்கள், அதுவும் குறைந்த மணித்தியால வேலையே செய்பவர். ஒரு புதன் கிழமை, அவரது கணவனை சந்திக்கச் சென்றேன். (அவருக்கு நேரத்தோடு வேலை முடிவதால், சில தேவைகளுக்காக அவரை நான் சந்திக்கச் செல்வதுண்டு) கதவின் முன் நின்ற போது கிர் என்ற சத்தம் காதில் விழுந்தது. உள்ளே போனேன். அவர் என்னை வரவேற்றார். சத்தம் இன்னும் ஒரு மடங்கு

கூடியிருந்தது. 'என்ன சத்தம்?' என்று கேட்டேன். 'புதிசா ஆட்டுக்கல் வாங்கினனுங்கள். அவ உழுந்து அரைச்சுக் கொண்டிருக்கிறா' என்றார். 'இண்டைக்கு அவ வேலைக்கு போகேலயோ?' இது நான். 'ஆட்டுக்கல் வாங்கினப் பிறகு அவவுக்கு ரெண்டு நேர வேலை ஒண்டு எடுத்துக் குடுத்திட்டன். காலைமை வேலைக்கு போட்டு வந்தவா, உழுந்தை அரைச்சு வைச்சிட்டு பின்னேர வேலைக்குப் போவா' என்று 'அற்புதமான' விளக்கமொன்றை அவர் எனக்குத் தந்தார். கூடவே 'என்ன இருந்தாலும் ஆட்டுக்கல்லில் அரைச்சு சுடுற தோசையைப் போல வராது' என்ற குறிப்பும் வேறு வந்தது.
மருத்துவ பீடத்திலிருந்து, பிரான்ஸிற்கு அகதியாக வந்துள்ள, ஒரு இளம் பட்டதாரியிடம், அம்மி, ஆட்டுக்கல், உரல், உலக்கை. இவைகளின் உபயோகம் பெண்களுக்கு 'ஏதாவது நன்மைகளைக் கொண்டு வருமா?' என்று கேட்ட போது 'நிச்சயமாக. இவைகளால் பாரிய நோய்கள் பெண்களைப் பீடிக்க வாய்ப்புண்டு. ஆனால் இவைகள் பற்றி எமது மருத்துவ ஆய்வாளர்கள் இன்று வரை எந்த கவனத்தையுமே எடுக்காமலிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும்.' என தனது அபிப்பிராயத்தை தெரிவித்தார்.

இதே வேளையில் 'ஆட்டுக்கல்லில் அரைத்து தோசை சுட்டால் அதற்கு ஒரு தனிச்சுவை உண்டு, மிக்ஸரில் இலகுவாக அரைத்துச் சுடும் தோசையின் சுவை மட்டமானது எனக் கருதுவது பரனோயா எனப்படும் உளவியல் நோயோடு சம்பந்தப்பட்டது' என்றும் சொன்னார்.


சேலை உடுத்தல் பெண்ணிலை வாதத்துக்கு இழுக்கானது என்று முழக்கமிடும் எமது பெண் பெண்ணிலைவாதிகளில் பலர் இந்த அம்மி, ஆட்டுக்கல் இறக்குமதி விடயத்தில் மௌனம் சாதித்துக் கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது.
'தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன முழம் என்ன' என்று பாடிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் ஆண் +பெண் பெண்ணிலைவாதிகள் இங்கே சுட்டிக் காட்டிய விதத்தில் விழித்தலும் எழுதலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று மட்டுமல்ல, சமுகத்திற்கு ஆரோக்கியமூட்டும் ஒன்றுமாகும்.

நன்றியுடன்
"தாயகத்திலிருந்து"
(கனடா)



# இன்னும் அவங்க?

தொடர்கதை



யோகன்
(ஸ்தவாங்கர்)

இந்த வெளிநாட்டு மண்ணின்ர தத்துப் புத்திரனாகி நான் கிட்டத்தட்ட பன்ரெண்டு வருசம் முடிஞ்சுபோச்சுது. வெளிநாட்டுக்கு வாறதுக்கு முதல் எவ்லாருக்குமிருக்கிற கற்பனையும் எனக்கும் இருந்ததெண்டு சொல்லுறதில நான் எந்தக் கூச்சமுமே படயில்ல.. சொல்லப்போனா, ஒருவிதமான சொர்க்க பூமிக்கு வாறதப்போல ஒரு மிகையான கற்பனைதான் இந்த மண்ணுக்கு வாறதுக்குமுந்தி, இந்த மண்ணப் பற்றி எனக்குள்ள இருந்தது. இந்த மண்ணப் பற்றின என்ர கற்பன தவறாப்போனதப் பற்றி எனக்கு ஆச்சரியமோ, கவலையோ கொஞ்சங்கூட இல்ல. ஆனால் இந்தப் பன்ரெண்டு வருசகாலத்தில ஒரு உண்மையான நட்பாவது கிடையாதாண்டு தேடின எனக்கு கிடச்ச பெரிய ஏமாற்றத்தான் என்னால ஜீரணிக்கேலாமல்க் கிடக்குது.

உலகம் ஒண்டாம்........? ஆனால் என்னச் சுத்திவர நிறய உலகங்கள். குட்டி உலகம், பெரிய உலகம், தட்ட உலகம், நீட்டு உலகம், கோணல் உலகம், பெட்டி உலகம், சப்பட்ட உலகம் இப்பிடி நிறய உலகங்கள் உறுண்டு, பிரண்டு, நிமிந்து, எழும்பித் திரியுதுகள்.

www.tamilarangam.net



முகத்துக்கு முன்னால சும்மா பம்மாத்துக்காகச் சிரிக்கிறதும், பின்னால நிண்டு விண்ணாணம் பேசிறதும் நட்பக் காசாக்கிறதும், ஏமாந்த எவனையாவது சுத்துமாத்துப் பண்ணிப் பேக்காட்டிறதும் இங்கவந்தும் எங்கட சனத்துக்கு கைவிட ஏலாத வியாதியாப் போச்சுது.

நானும் மனுசன்தான். எனக்கும் ஒரு சராசரி மனுசனுக்கிருக்கிற ஆசாபாசங்கள் விருப்பு வெறுப்புகள் இருக்கத்தான் செய்யுது. நானொண்ணும் வானத்தில இருந்து குதிச்சு வரயில்ல. நானும் மனுசன்தான். பன்ரெண்டு வருசத்துக்கு முந்தி என்ர நாட்ட மட்டும் நான் விட்டிட்டு வரயில்ல; என்ர உறவுகளையுந்தான் விட்டிட்டு வந்தனான். அதிலயும் இங்க எங்கயுமே தேடியும் கிடைக்காத நல்லதொரு நட்பையும் நான் பிரிஞ்சு வந்ததுதான் என்னால தாங்கேலாத விசயம்.

நட்பு; நிறையத் தத்துவப் புத்தகங்களும், மதப் புத்தகங்களும், கத கட்டுரயளும் நட்பப் பற்றி பக்கம் பக்கமாக, அத்தியாயம் அத்தியாயமாக எழுதலாம்; மனிச வாழ்க்கையைப் பற்றி வரிவரியாக எழுதலாம். ஆனால், என்னப் பொறுத்தவரையில அதெல்லாம் வெறும் தியறியாத்தான் கண்டிருக்கிறன். இப்படி நான் சொல்லுறத நினச்சு யாரும் என்னத் தப்பாக நினைக்கவேணாம் தயவுசெய்து. என்ர அனுபவத்தத்தான் சொல்லுறன். ஆனால் அதேவேளை ஒரு சராசரி மனுசன் எங்கயாவது ஒரு மூலையில மனிசத் தனத்தோட வாழ்ந்துகொண்டிருந்தா அவன்ர வாழ்க்கமுற எங்கட ஆக்களுக்கு பயித்தியக்காரத் தனமாத்தான் தெரியும். நல்லதனமான நடமுற வாழ்க்கய மதிக்கத் தெரியாமல், வெறும் ஏட்டுச் சுரைக்காயள மட்டுமே கட்டியழத் தெரிஞ்சு வச்சிருக்கிறதுதான் இன்னும் எங்கட சமுதாயத்தட்டயிருந்து பிரிச்செடுக்க ஏலாத செல்வம்.

இந்த அந்நிய மண்ணில நான் வந்து விழுகிறதுக்கு முந்தி, என்னோட சீவிச்ச ஒரு மனுசனப் பற்றி நான் நினச்சுப் பார்க்காத கணங்களே இல்ல. நட்பு; இங்கவந்து இண்டைக்குவர எனக்குக் கிடைக்காத விசயம். நட்பப் பற்றி எழுதினால் என்ர நாதனப் பற்றி எழுதவேண்டி வரும். நாதனப் பற்றி எழுதினா... அவன்ர சுபாவங்கள், காதல்ச் சிக்கலுகள் இதெல்லாம் எழுதவேண்டித்தான் வரும். இனித்தான் கதையா (?) எண்டு கேக்கிறியளா.......? ஓமோம், இனித்தான் கதை தொடங்கப் போகுது. தயவுசெய்து தப்பாக நினைச்சுப் போடாதேங்கோ. ஏதோ புரியாத புதிர, விளங்காத தனத்தோட எழுதிக் குழப்பப் போறனெண்டு தயவுசெய்து தப்பாக நினச்சுப் போடாதேங்கோ. சாதாரண மனுசன்தான் என்ர நாதன். ஆனபடியால் ஒரு மனுசன் சாதாரணமாகச் சந்திக்கிற விசயங்கள்தான் இது. ஆனால் அவன் என்னோட சீவிச்சதாலயோ என்னவோ, அல்லது, அவனப்போல வேறொரு நட்பு இங்க கிடைக்காததாலயோ என்னவோ அவன்ர தன்ம பற்றின தாக்கம் என்ர வாழ்க்கயில ஒரு இனம்புரியாத தாக்கத்த ஏற்படுத்திப் போட்டுதெண்டது உண்மதான். இது என்ர நாதன்ர கதை. இதில நானும் ஒரு பாத்திரம். ஆனபடியா இது என்ர கதையுந்தான். இனிக் கதைக்குப் போவமே?

ஊரெல்லாம் அடங்கி, சத்தம் மரணித்துப்போன நள்ளிரவு. இடையிடையே கீச்சிட்டுச் செல்லும் இராக்குருவிகள்கூட எங்கு தொலைந்தனவோ தெரியவில்லை.



எந்த அனுக்கமுமேயற்று பூமி இருட்போர்வைக்குட் புதைந்து கிடந்து தூக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது. அந்த ஊரின் பிரதான தெருமுனையில் இருந்து சற்றுத் தள்ளி, தெருவோரத்தில், பனையோலை மதிலுக்குள், ஆறேழு தென்னைகள் புடைசூழ அமைந்திருந்தது நாதனின் வீடு. அதிலிருந்து சற்றுத் தள்ளி, சுமார் ஆறு அல்லது ஏழு வீடுகள் கடந்தால் சர்வானந்தனின் வீடு. சர்வானந்தனின் வீட்டு வளவிலும் பத்தெட்டுத் தென்னைகள். வழமையாகவே, வானத்தில் காற்று வீசாத நேரத்திலும் தென்னம் வழவுகளில் காற்று வீசுவதுபோல் தென்னோலைகள் சரசரக்கும். ஆனால் இன்று அந்தச் சரசரப்பும் அடங்கி, அமைதியாகக் கிடந்தது அந்த மொத்த ஊருமே.

இன்று செய்து முடித்த காரியத்தினால் நாதனின் இதயம் பூரித்துப் போய்க் கிடந்தது. அந்த மகிழ்ச்சியின் பேரால் அவனது தூக்கம் தூரப் போய்விட்டது. இன்று பூராவும் நடந்த நிகழ்வுகள் அவனைச் சுற்றிச் சுற்றி அலையலையாய் எழுந்து கொண்டிருந்தன. நாதனின் ஊரை அண்டிய வயல்வெளியின் மறுபக்கமாய் அமைந்துள்ள அந்தக் குடியேற்றக் கிராமம், சிறுசிறு குடிசைகள் அமைத்து தமது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கும் ஏழைக் கூலி விவசாயிகள். படிப்பறிவை நுகர்ந்துகொள்ள சிறு பள்ளிக் கூரைகூட இல்லாத அவர்களின் பச்சைப் பிஞ்சுகள். கல்வி கற்கும் நிலையில் அவர்களை விட்டுவைத்தால் சிந்திக்கத் தொடங்கிவிடுவார்கள்; சிந்திக்கத் தொடங்கினால் தமக்கு எதிராகச் செயற்படுவார்கள் என்ற அச்சத்தினால்



அவர்களைப் படிப்பறிவற்றவர்களாய் மந்த நிலையில் அடக்கி வைத்திருக்கும் மேல்சாதியினர் என்று தம்மைக் கூறிக்கொள்வோர்.

தாமே அதியுயர்ந்த சாதியினரென்று தம்பட்டமடித்துக் கொள்ளும் இவர்களால், கீழ்சாதியினரென்று ஒதுக்கப்பட்டு ஓர் ஓரத்தில் வாழும் அந்த மக்களுக்கு ஓர் சிறு பாடசாலையை, தானும் தனது பாடசாலை நண்பர்களுமாகச் சேர்ந்து இன்று அமைத்துக் கொடுத்திருந்தான் நாதன். இந்த முயற்சியில் நிறையவே ஒத்தாசையாய் இருந்தான் நாதனின் நண்பன் சர்வானந்தன். நீண்ட காலமாக நாதனும், சர்வாவும் சேர்ந்து போட்டிருந்த பெரியதோர் திட்டம் இன்றுதான் நிறைவேறியது. அந்தச் சந்தோஷத்தினால் நாதனுக்குத் தூக்கமே வரவில்லை. சர்வாவின் வீட்டில் சர்வாவுக்கும் இதேநிலைதான்.

சிறுகாற்றும் செத்துப்போய்விட்ட அந்த

www.tamilarangam.net



நிசப்த நள்ளிரவில், திடீரென்று அவலமாய் எழுந்த மனிதக் கூக்குரல்கள்......... அமைமதியாய் உறங்கிக் கொண்டிருந்த பூமியை அதிரவைத்தன. நெஞ்சை அதிரவைக்கும் அவலக் கூக்குரலால், தூக்கமற்று விழித்துக் கொண்டிருந்த நாதன் திடுக்கிட்டெழுந்து வெளியே ஓடினான். சந்தேகமே இல்லை. அந்தக் குடியேற்றக் கிராமத்தில்தான் ஏதோ அனர்த்தம் நிகழ்ந்துவிட்டதென நிச்சயமாய் எண்ணிக் கொண்டான். அவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீதிக்கு வரவும், சர்வானந்தனும் அங்கு வரவும் சரியாயிருந்தது.

சாதி மேலாதிக்கத்தின் தீ நாக்குகளில் அந்தக் குடியேற்றக் கிராமத்தில் இவர்களால் கட்டப்பட்ட சிறு ஓலைக் கொட்டில் பள்ளிக்கூடம் வெந்துகொண்டிருந்தது. தீயில் கருகிக் கொண்டிருந்தது பள்ளிக்கூடம் மட்டுமல்ல, அந்தக் கிராமத்தின் சிறுசிறு குடிசைகளும்தான். நாதனும், சர்வாவும் அந்தக் கிராம மக்களோடு சேர்ந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனாலும் குடிசைகளோடு சேர்ந்து அந்தப் பாடசாலையும் கருகியே விட்டன. சாதிமேலாதிக்கம் இந்த இருட்டை வென்றுவிட்டது.

SUMAIKAL
ALMENNINGS GT - 1
4013 STAVANGER.
Norway

சர்வானந்தன் வந்துகூறிய செய்தி சியாமளாவை நிலைகுலைந்து போகவைத்தது.



"ஏன்.... என்ன சர்வா நடந்தது? எப்பிடி?..... இது..... நாதன் நெருப்புக்க எங்க......?" சியாமளாவின் தொண்டைக் குழியைவிட்டு வார்த்தைகள் வெளிவர மறுத்து நின்றன. "ஒண்டும் பயப்பிடிற மாதிரியில்லை..... ராத்திரி ஆரோ நேசபுரத்துக்குள்ள நெருப்பு வச்சுப் போட்டாங்கள். அத நூர்க்கப் போன இடத்திலதான் நாதன்ர கால்ல நெருப்புப் புடிச்சுப் போட்டுது."

படலையடியில் நின்று சர்வாவும் சியாமளாவும் பேசிக்கொண்டவை கிணற்றடியில் நின்ற தேவியின் காதுகளிலும் விழுந்தன. தேவிக்குத் தலை சுற்றி மயக்கமே வந்துவிடும்போல் இருந்தது. வலுவை வரவழைத்துச் சமாளித்துக் கொண்டாள். ஆனாலும் அவளின் உடல் ஒருவித நடுக்கத்துள் சிறைப்பட்டுப் போனது. "நாதன்" என்று சத்தமின்றி உச்சரித்துக் கொண்டாள் தேவி. தேவியின் விழிகளில் தேம்பிய நீர், முட்டி வழிந்து அவளது இரு கன்னங்களிலும் கோடு கீறியது. கண்ணீர்க் கசிவைத் துடைத்தபடி, தன்னைச் சமாளித்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்து கொண்டாள் தேவி.

இத்தனைக்கும் நாதனை ஒருதடவைகூட தேவி கண்டறிந்ததேயில்லை. ஆனால், நாதன் என்ற அந்த அறிமுகமில்லாத மனிதனை தேவி நேசித்தாள். மானசீகமாக காதலித்தாள். எப்படி....?

நாதன், சர்வானந்தன், சியாமளா ஆகியோர் ஒரே வகுப்பைச் சேர்ந்த, கிட்டத்தட்ட மாத வித்தியாசங்களில் ஒரே வயதுடையவர்கள். விடலைப் பருவத்தினர். நாதனின் கள்ளங் கபடமற்ற போக்கும், பிறருக்கு உதவும் மனப்பாங்கும், தாழ்த்தப்பட்ட மக்களைத் தேடிச் சென்று, அவர்களுக்கு உதவுவதும், பாடசாலையிலும் தனது ஊரிலும் நிகழும் அநியாயங்களை நேர்சென்று சந்தித்து முகங்கொடுத்துப் போராடுவதும் தனது நண்பர்களையும் பொதுச் சேவையில் ஈடுபட வைப்பதும், நண்பர்களுக்காகத் தன் ஜீவனையும் விடுவதற்குரிய துணிவையும் சியாமளா மிகவும் விரும்பினாள். நாதன்மீது ஓர் நல்லபிப்பிராயத்தைக் கொண்டிருந்தாள். நாதனைப் பற்றித் தன் அக்காள் தேவியிடம் தினம் தினம் கூறுவாள். சியாமளாவின் வாய்மொழியால் மட்டுமே நாதனின் மனிதமனத்தைப் புரிந்துகொண்டாள் தேவி. இதுவரை கண்களில் புலப்படாத அந்த மனிதனை தேவி நேசித்தாள், காதலித்தாள். (என்ன? ஏதோ படத்தின் கதைபோல் அல்லது எங்கேயோ கேள்விப்பட்ட கதைபோல்



உள்ளதா??? இது நிஜம். நிஜங்களின் எதிரொலி. என்னைச் சூழவாழ்ந்த, என்னோடு வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கைத் துணிக்கைகள். பெயர்களைவிட, சம்பவங்கள் எனது வாழ்க்கையில் நான் சுவைத்தவை.)

வேதனையால் முனகியபடி யாழ் வைத்தியசாலைக் (காய வார்ட்டில்) கட்டிலில் கிடந்தான் நாதன். பக்கத்தில் சர்வானந்தனும், சியாமளாவும் கட்டிலின் இரு கரைகளிலும் நின்றனர். நாதனின் வலது தொடையிலிருந்து, கீழ்நோக்கி கெண்டைக்கால்வரை ஒரு பக்கவாட்டில் தீக்காயம். நாதனுக்கு உடல் வேதனையைவிட, அந்த அப்பாவி மக்கள் ஒண்டிவாழும் குடிசைகள் அனைத்தும் தீயில் கருகிய வேதனைதான் தாங்க முடியாதிருந்தது. பெருங்குரலெடுத்து அழுதேவிட்டான். சியாமளாவும், சர்வாவும் அவனுக்கு ஆறுதல் கூறித் தேற்றினார்கள்.

சியாமளாவுக்கு ஒரே ஆச்சரியமும், ஒருவித இன்ப அதிர்ச்சியும். இத்தனை காலமும் வாய்மூடியாக இருந்த அக்காள், இன்று பெரியதோர் உண்மையைக் கக்கிவிட்டாள். தொடரும்...



www.tamilarangam.net



## வாசகர் கடிதம்

அன்புடன் சுமைகள் ஆசிரியருக்கு,

சுமைகள் முதலாவது இதழுக்கும் இரண்டாவது இதழுக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றனவே?

முதலாவது இதழில் உள்ள அவசரம் இரண்டாவது இதழில் இல்லை. ஆனாலும் வடிவமைப்பில் இன்னும் சிறிது கவனம் செலுத்துவது நல்லம். ஆக்கங்கள் எதுவும் பெரிதாகக் குறை கூறுவதற்கில்லை. ஆயினும் சிலவற்றைக் குறிப்பிட்டேயாக வேண்டும். முன்பக்கத்தில் உள்ள பழமைப் பக்கங்களில் வெளியாகியுள்ள அம்பா, இரண்டு பந்திகளில் உள்ளவையும் ஒன்றையொன்று தொடர்பற்றிருக்கின்றன. அவை தனிப் பாடல்களா? அல்லது ஒரே பாடலா?

அடுத்து எதிரொலிப் பகுதியில் பேர் அவர்ளின் பேட்டி மிகவும் கனமுள்ளதோர் விடயமாய் இருந்தது. வெளிநாட்டு மக்களின் மனதில் எமது சமூகத்தைப் பற்றிய தாக்கம், கருத்து எப்படியுள்ளது என்பதை அறியக் கூடியதாக இருந்தது. இப்படியான வித்தியாசமான பேட்டிகளை எதிரொலி பகுதியில் தொடர்ந்து வெளியிடுவது வரவேற்கத் தக்கது.

சரவணபவான்
(பேர்லின்)

அன்புடன் சுமைகளுக்கு,

சுமைகள் இரண்டாவது இதழ் கிடைத்தது. சிறுவர் பகுதியைச் சேர்த்துக்கொண்டது வரவேற்கத்தக்கது. ஆயினும், சிறுவர்களுக்கான ஆக்கங்களில் மிகவும் கவனம் செலுத்தவேண்டுமென்பது எனது தாழ்மையான வேண்டுகோள். எழுத்துப் பிழைகள்கூட சிறுவர் பகுதியில் விடுவது நல்லதல்ல. இந்தவகையில் இரண்டாவது சுமைகளின் சிறு தவறொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். "உங்கள் திறமைக்கு"- என்ற பகுதியில் வண்ணாத்திப்பூச்சியென்ற பொருட்பட எழுதியுள்ளீர்கள். வண்ணாத்திப்பூச்சியென்பது பேச்சு வழக்கிலுள்ள தமிழ். ஆனால் வண்ணத்துப் பூச்சியென்பதே எழுத்துத் தமிழாகும். சிறுவர்களுக்கான ஆக்கத்தெரிவுகளில் இனிமேலாவது கவனம் செலுத்தும்படி அன்போடு வேண்டுகின்றேன்.

இப்படிக்கு
பி.குணம்
ஒஸ்லோ.

அன்புடன் சுமைகளுக்கு,

நீண்ட காலமாக என்னுள் குடைந்து கொண்டிருந்த ஒரு பெரியதொரு விடயத்தை சுமைகளின் இரண்டாவது இதழில் "நிராதரவாக்கப்படும் நாளைய தலைமுறை" என்ற தலைப்பில் சுமதி அவர்கள் எழுதியுள்ள கட்டுரை மூலம், என்னைப் போல் வேறு உள்ளங்களும் எண்ணிக் கொண்டுதான் இருக்கின்றன என்று என்னும் போது மகிழ்ச்சியாகத்தான் உள்ளது. அதேவேளை, இப்பிரச்சனைக்கு எமது சமுதாயத்தினால் எத்தகைய தீர்வை முன் வைக்கப் போகிறோம் என்பதே எம் அனைவருக்கும் முன்னாலுள்ள கடமையாகின்றது.

எஸ். தவநாதன்.
(பிரான்ஸ்)

மதிப்பிற்குரிய சுமைகள் ஆசிரியருக்கு,

சுமைகள் இரண்டாவது இதழில் சி.மௌனகுரு அவர்களின் மரமும் விழுதும் கட்டுரையை வாசிக்க முடிந்தது. இதேபோன்று பாரம்பரியக் கலைகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளைத் தேடிப் பிரசுரிப்பதன் மூலம் எமது அரும்பெரும் கலைப்பொக்கிஷங்களை அழியவிடாது பாதுகாக்கும் பணியில் ஓர் கணிசமான பங்கை ஆற்ற முடியும் எனக் கருதுகிறேன்.

வெளிநாடுகளில் வெளிவந்து கொண்டிருக்கும் ஏனைய பத்திரிகைகள் சஞ்சிகைகளும் இவ்விடயத்தில் சிறிது கவனஞ் செலுத்துவது மிகவும் வரவேற்கத் தக்கது.

நாட்டுக் கூத்துகள் போன்ற எமது பாரம்பரிய கலைப் பொக்கிஷங்களைப் பற்றிய பூரண ஆய்வினை மேற்கொள்வோருக்கு, வெளிநாடுகளில் உள்ளோர் உதவி செய்ய முடியும். குறிப்பாக இப்போது எமது தேசத்தில் ஆவணக்காப்புச் செய்யும் எந்தச் சூழ்நிலையுமே இல்லை. எனவே இவை தொடர்பான ஆவணக் காப்பகங்களைத் தற்காலிகமாகப் புலம் பெயர்ந்த நாடுகளில் நிறுவி ஒத்துழைக்கலாம். இக்கருத்தை அனைத்து சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் கருத்தில் கொள்வதும் செயற்படுவதும் சாலச் சிறந்தது.

– தேவகுமார் –
இலங்கை

சுமைகள் கண்டேனடா..
சுவையாய் இருந்ததடா..
குறைகள் கண்டேனடா..
அவைகள் நிவர்த்துவயா...

சுதந்திரம் எமக்கு இன்னும் இல்லை
சுத்திண்ட மாயும் தேவை இல்லை
மேதினம் செல்ல எமக்கெங்கே நேரம்?
தினம்,தினம் உணவுக்குத் திண்டாடப்-
போகுது நேரம்.


தமிழர்கள் நடத்தை பற்றி
அலுவலர்
வார்த்தை கண்டா தெரிந்திடல் வேண்டும்?
தலைநிமிரச் சொல்லிய பாரதி இருந்திட்டால்
தலைகுனியச் சொல்லிக் கதறியே இருப்பரன்.

துயரம்பலர் கூறிடமுடியும்
ஆனாலும் சிலரால்தான்
இது செய்ய முடியும்.

பகிர்–
(ஸ்தவங்கர்)
10-06-92


டென்மார்க்கிலிருந்து

Chanchive




சஞ்சீவியின் தொடர்புகளுக்கு

Chanchive
Postbox 1205
7500 Holsterbro
Denmark.

www.tamilarangam.net

## எம்மிடமிருந்து தொலைந்தவர்கள் நினைவாக



நமது சூரியன்
உங்களோடுதான் மரணித்தது.

நீங்கள் வருக
உங்களோடு
நமது சூரியனும் எழுக.

நமது
சூரியன் வருக.
சூரியனோடு
நீங்களும் எழுக.

காத்திருப்பு
காலத்தின் பணிப்புக்காக.
தானாகத்
திறபடாத படிக்கு
உங்கள் கல்லறையின்
வாயிற் கற்கள்.
காவலிற் தூதர்கள்.
நாங்கள் திறப்போம்
காலம் பணித்ததென்று
கல்லறையின் வாசலை.
நீங்கள் வருக.
உங்களோடு
நமது சூரியனும் எழுக.

மக்களின் மௌனங்களுக்கெல்லாம்
ஓர்
கல்லறை கட்டப்பட்ட பின்
உங்கள் கல்லறைகள்
திறக்கப்படும்
மௌனம் தொலைத்த
மக்கள் திரளால்.

அதிகாலை ஆரவாரம்
அவற்றிடை பூபாளம்
நமது சூரியன்
ஒளி கொண்டு வருக.
சூரியனோடு
நீங்களும் எழுக..

ஒளியைப் பறித்து
இருளைத் தந்தவர்
ஓடி மறைவர்.
ஓடும் குதிகளில்
ஒட்டிச் செல்லும்/ எமது மண்ணையும்

மௌனம் தொலைத்த
மக்கள் பறிப்பர்.

மண்ணில் இருந்து
விண்ணைத் தொடவும்
விலங்கற்ற காற்றில்
உயரும் நமது
தேசத்தின் பாடல்

—தமயந்தி—
—06—06—92



# 'கலையே வாழ்வாகி வாழ்வே கலையாகி...'



யாழ். கலாசாரப் பேரவையினர் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடாத்திய நாடக, அரங்க பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த 87இன் முற்பகுதி ஞாயிறுகளில் ஒன்று. வழமையாகக் களப்பயிற்சி நிகழ்த்துவோர் ஒருபுறம் இருக்க, ஒரு 'வயது முதிர்ந்த இளைஞர்' மண்டபத்துள் வருகிறார். அறிமுகப் படலம் முடிந்த சில நிமிடங்களிலேயே அங்கிருந்த அத்தனை பேரையும் தனது குரலால், நடிப்பால், நகைச் சுவையால், துடிப்பால் ஆட்கொண்டுவிடுகிறார் அக் கலைஞர். அன்றுதான் என்னை மிகவும் கவர்ந்த ஒரு கலைஞரான நடிகமணி வி.வி.வைரமுத்துவை நேரில் சந்திக்கிறேன்.

முன்பெல்லாம் சிறுவனாயிருந்த காலத்தில் கோயிலில் விடியவிடியக் கூத்து நடக்கிறதென்றால், அங்கு நடிப்பவர் நடிகமணியாகத்தான் இருக்க வேண்டும். மக்களை தன்வசம் ஈர்த்து 'யாரடி கள்ளி நீ' என்று நடிகமணி பாடுவதை ஒலிபெருக்கி இல்லாமலே நீண்ட தூரம் கேட்க முடியும். சிறுவனாயிருந்த காலத்தில் அவரது ஆற்றலை முழுமையும் எடைபோட என்னால் முடியவில்லை. நான் அவரது கலைகளைக் கோயில்களில் கண்டு இரசிக்கவேண்டும் என்று விரும்பிய பருவத்தில் கோயில்கள் திருவிழாக்களே இல்லாது மூடப்பட்டிருந்தன.

அரங்கப் பயிற்சியில் ஒரு குடும்பமாய் எல்லா வேறுபாடுகளையும் மறந்து ஆர்வமுடன் பயின்றுகொண்டிருந்த எங்களை நடிகமணி ஒரேயொரு நாள்தான் சந்தித்தார். எனினும் அன்று முழுதும் எம்முடன் இருந்தார். 'கட்டித் தங்கம் வெட்டியெடுத்து' என்ற பாடலுக்கு உண்மையாகவே வெட்டியெடுப்பதுபோல் நகைச்சுவையாக நடித்துக் காட்டிய நடிகமணியை அன்று களப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த எவரும் மறக்கமாட்டார்கள்.

2500 தடவைகளுக்குமேல் மேடையேறிய அரிச்சந்திர மயான காண்டம், பக்த நந்தனார், பூதத் தம்பி, சத்தியவான் சாவித்திரி போன்ற நாடகங்கள்மூலம் கிராமத்து மக்களிடையே புகழ் பெற்றிருந்த நடிகமணி 08-07-1989 இல் கொழும்பில் மரணமானார் என்ற செய்தி, நடிகமணியை அறிந்த எவருக்கும் வேதனை தருவதே.
எமது நாடக மரபை நாமே பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற தீரா வேட்கையில் வாழ்வைக் கலையாகவும், கலையை வாழ்வாகவும் வாழ்ந்து காட்டியவர் நடிகமணி. எங்கள் பாரம்பரியக் கலை வடிவங்களை மேலும் மெருகூட்டிப் பேணிப் பாதுகாப்பதே அந்தக் கலைஞரின் உயர்ந்த உள்ளத்துக்கும் ஆற்றலுக்கும் நாம் தரும் காணிக்கையாய் இருக்கமுடியும்.

- இளவாலை விஜயேந்திரன் -

www.tamilarangam.net

ஒரு நொடி
ஒரு கணம்
ஓர் இமைப் பொழுது
கண் மூடித் திறப்பதற்குள்
அது நிகழ்ந்தது.

குத்தென
சாய்ந்து சரிந்து,
சட்டென
மேலெழ நிமிர்கையில்
எச்சமிட்டது.

"யார் தலையில் விடியுமோ?"

கண்களை உரசும்
சூரிய தெறிப்பு
முகிலுக்குள் மறையும்
உயிர் கொத்திப் பருந்து
மனிதம் உறைந்து
உயிர்த்தது.

"குடிமனைக்குள் போடுறானே
கோதாரியில் போவான்.
கடவுளே கண் இல்லையா?"

மண்ணை வாரி
வார்த்தையை விசிறி
காற்றைச் சபித்து...

எங்கே
என் வீடு?
என் முற்றம்?

சின்ன குருவிகள்
தம் வியர்வைக் குழையலில்
தொட்டிழைத்த கூடு
தொப்புள் கொடியில்
பூத்த சிறு மலர்
தத்தித் தத்தித்
தளிர் நடை நடந்து
விரித்த கன வுகளின்
முற்றம்.

முற்றத்து விளிம்பில்
மாலைக் காற்றுக்கு
மணம் சேர்த்த மல்லிகை,
காலை இளமலர்வுடன்
வணக்கம் சொல்லும் செம்பரத்தை
குலைதள்ளிக் கிடந்த
பச்சை வாழை
எல்லாமே - எல்லாமே
எங்குற்றது...?
என்னவாயிற்று...?

குண்டுகள்
சப்பித்தின்று
துப்பிய எச்சத்துள்
பால்மாப் பேணி,
அலுமினிய கோப்பை
குழந்தையின் சூப்பி
எப்படித் தேட...?


இந்திய சிப்பாயே
உனது நாட்களில்,
என்னவாய் முனிந்தாய்?
"ஆளுக் கொருவீடு,
வீட்டுக் கொரு கிணறு,
கிணற்றுக்குள் தண்ணீர்."

வெந்து அவிந்து,
பொசுங்கி கருதி,
உடைந்து சிதிலமாய்
சிதறிக் கிடக்குது.

எனக்கென்றொரு.
வீடு.
அதுவும் இல்லையென்றாயிற்று.
இனி...

23-07-1990
கி.பி. அரவிந்தன்
*ஓசையிலிருந்து*

★



www.tamilarangam.net



கீழேயுள்ள சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| உ+ம்:- மகிழ்ச்சி | கவலை |
| வரவு. | --------- |
| இன்பம். | --------- |
| இரவு. | --------- |
| வீரன். | --------- |
| ஏழை. | --------- |
| நல்லவன். | --------- |
| மூடன். | --------- |
| மென்மை. | --------- |
| வெப்பம். | --------- |
| நறுமணம் | --------- |

[கோழை, பகல், அறிவாளி, துர்நாற்றம், பணக்காரன், செலவு, கெட்டவன், துன்பம், வன்மை, தண்மை]



கீழேயுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஒருமை, அல்லது பன்மைச் சொற்களை தெரிந்து எழுதிக் கொள்ளுங்கள்.

| **ஒருமை** | **பன்மை.** |
|---|---|
| [உ+ம்] நரி. | நரிகள். |
| கோழி. | ---------- |
| எலி. | ---------- |
| ---------- | பூனைகள். |
| ---------- | நாய்கள். |
| [உ+ம்] படம் | படங்கள் |
| புத்தகம் | ---------- |
| வாகனம் | ---------- |
| பாடம் | ---------- |
| -------- | மரங்கள் |
| -------- | காகங்கள் |
| [உ+ம்] பசு | பசுக்கள் |
| பூ | -------- |

www.tamilarangam.net



சென்ற இதழின் தொடர்...

## புதிய ஆத்திசூடி

23. கோல்கைக் கொண்டு வாழ்
24. கவ்வியதை விடேல்
25. சரித்திரத் தேர்ச்சி கொள்
26. சாவதற் கஞ்சேல்
27. சிதையா நெஞ்சுகொள்
28. சீறுவோர்ச் சீறு
29. சுமையினுக் கிளைத்திடேல்
30. சூரரைப் போற்று
31. செய்வது துணிந்துசெய்
32. சேர்க்கை அழியேல்
33. சைகையிற் பொருளுணர்
34. சொல்வது தெளிந்துசொல்
35. சோதிடந் தனையிகழ்
36. சௌரியந் தவறேல்
37. ஞமலிபோல் வாழேல்
38. ஞாயிறு போற்று
39. ஞிமிறென இன்புறு
40. ஞெகிழ்வ தருளின்
41. ஞேயங் காத்தல்செய்
42. தன்மை யிழவேல்
43. தாழ்ந்து நடவேல்
44. திருவினை வென்றுவாழ்
45. தீயோர்க் கஞ்சேல்
46. துன்ப மறந்திடு
47. தூற்றுத லொழி
48. தெய்வம் நீ யென்றுணர்
49. தேசத்தைக் காத்தல் செய்
50. தையலை உயர்வு செய்
51. தொன்மைக் கஞ்சேல்
52. தோல்வியிற் கலங்கேல்
53. தவத்தினை நிதம் புரி
54. நன்று கருது
55. நாளெலாம் வினைசெய்
56. நினைப்பது முடியும்
57. நீதிநூல் பயில்
58. நுனியளவு செல்
59. நூலினைப் பகுத்துணர்
60. நெற்றி சுருக்கிடேல்
61. நேர்படப் பேசு
62. நையப் புடை
63. நொந்தது சாகும்
64. நோற்பது கைவிடேல்
65. பணத்தினைப் பெருக்கு
66. பாட்டினில் அன்புசெய்
67. பிணத்தினைப் போற்றேல்
68. பீழைக்கிடங் கொடேல்
69. புதியன விரும்பு
70. பூமி யிழந்திடேல்
71. பெரிதினும் பெரிது கேள்
72. பேய்களுக் கஞ்சேல்



## பாடுபடுபவர்க்கே . . .

பாடு படுபவர்க்கே—இந்தப்
பாரிடம் சொந்தமையா!
காடு திருத்தி நல்ல—நாடு
காண்ப தவரலவோ?

மந்திர மோதுவதால்—எங்கும்
வயல்வி ளைவதுண்டோ?
தந்திரப் பேச்சாலே—அரிசி
சாத மாயிடுமோ?

கட்டும் ஆடையாகப்—பருத்தி
காய்த் தளிப்ப துண்டோ?
சட்டி பானையெலாம்—மண்ணில்
தாமே எழுவதுண்டோ?

உழுது பயிர்செய்வோன்—வயிற்றுக்
குணவு பற்றாமல்
அழுத முதுநிதம்—நிற்ப
தறியீ ரோஐயா!

ஆடை நெய்திடுவோன்—போர்க்கும்
ஆடை யில்லாமல்
வாடை கொண்டுநிதம்—கிடந்து
வருந்த லாமோ ஐயா!

விடு கட்டுமொரு—கொத்தன்
விடுதி யில்லாமல்,
ஆடு மாடுகள்போல்—உலகில்
அலைய லாமோ ஐயா!

www.tamilarangam.net



கோடி கோடியாக—நீங்கள்
குவித்திடும் லாபம்
வாடும் எம்மக்கள்—உண்ணு
வயிற்றுச் சோறலவோ?

மனம் திரியாமல்—காலை
மாலை யெப்பொழுதும்
குனிந்து வேலைசெய்வோர்—கும்பி
கொதிக்க லாமோஐயா!

வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமையா!
ஏழை என்றொருவன்—உலகில்
இருக்க லாகாதையா!


தேசிகவிநாயகம்பிள்ளை

விளக்கக் குறிப்புகள்

பார் - பூமி; தந்திரம் - உபாயம்; சாதம் - சோறு;
ஆடை - உடை; நிதம் - தினம்;
கொத்தன் - கட்டிட வேலை செய்வோன்;
கும்பி - வயிறு.




## வர்ணம் தீட்டுவோம்




www.tamilarangam.net



இங்குள்ள இலக்கங்களினை ஒழுங்குமுறையில் தொட்டுச் செல்லும்படி கோடு கீறினால், அந்த அழகிய படம் வெளிவரும்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செல்விக்கு சர்வதேச விருது

கவிதைகளோடியாழ்
இரு வரிகளில் கவிதை
"சரித்திரம்" இருக்கு.

International PEN என்று அழைக்கப்படும் சர்வதேச கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள் கூட்டமைப்பு (Poets, Essayists and Novelists) அவர்களுடைய வருடாந்தச் சிறப்புப் பரிசை இம்முறை செல்விக்கு (செல்வநிதி தியாகராசா) வழங்கியுள்ளது.

தங்களுடைய நம்பிக்கைக்காகவும், இலட்சியத்திற்காகவும் எழுத்துத் தளத்திலும் கலைத் தளத்திலும் பணி புரிந்தவர்களை, புரிபவர்களைக் கௌரவிப்பதற்காக வழங்கப்படும் இந்தப் பரிசு உலகப் புகழ் பெற்றதாகும்.

சொல்லாத சேதிகள் என்ற பதினொரு பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பில் இவரது கவிதைகளும் உள.

தோழி என்ற பெண்கள் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தவர்.

யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் 2ம் வருட விசேட படிப்பு பட்டதாரி மாணவியான இவர் நாடக நடிகரும், நெறியாளருமாவார்.

திசையில் வெளியான செல்வியின் கவிதை ஒன்று கீழே:

## இராமனே இராவணனாய்

நான் மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ளேன்.
என்னை யாரும் கேள்வி கேட்டுத்
தொந்தரவு செய்யாதீர்கள்
நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது எனது இதயம்

எந்த நேரமும்
விழுந்து வெடித்து விடக் கூடும்.

அசோகவனங்கள் அழிந்து போய் விடவில்லை
இந்த வீடே
எனக்கான அசோகவனமாயுள்ளது
ஆனால்
சிறைப்பிடித்தது இரா வணனல்ல, இராமனே தான்.

இராமனே இராவணனாய்
தனது அரசிருக்கையின் முதுகுப் புறமாய்
முகமூடிகளை மாற்றிக் கொண்டதை
பார்க்க நேர்ந்த கணங்கள் ...
இதயம் ஒரு முறை அதிர்ந்து நின்றது.

இந்தச் சீதையைச் சிறை மீள வருவது யார் ?

அசோக வனங்கள் அழியாது
இன்னும்
எத்தனை காலத்திற்கு ?

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.